விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 01 திங்கட்கிழமை (16.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333


MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-685)

## கொரோனாவினால் மேலும் ஐவர் பலி

### உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 58 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் மேலும் ஐவர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரி 19

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியானது

### மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகளும் வெளியீடு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டின் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

doenets.lk அல்லது results. exams.gov.lk என்ற இணையத் தளங்களில பெறுபேறுகளை பார்வையிட முடியும்.

அத்துடன் குறுந் தகவல் மூலம் 19

## குருநகரில் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் வசித்தவருக்கு கொழும்பில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என செய்தி வெளியாகி இருந்தது.

குறித்த கொரோனாத் தொற்றாளர் 19

நீங்கள் வேலை தேடுபவரா?
வேலைவாய்ப்பு
இன்றைய வலம்புரி இல்

# வடக்கில் அதிகரிக்கும் படுகொலைகள்!

### பளைப் பகுதியில் நேற்று ஒருவர் வெட்டிப் படுகொலை

*(யாழ்ப்பாணம்)*

*கொரோனா வைரஸ் தொற்றினால் நாட்டில் உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற அதேவேளை வடக்கில் அண்மைய நாட்களில் வன்முறைக் கும்பல்களினால் இடம்பெறும் படுகொலைகளும் அதிகரித்துள்ளமை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்த வெள்ளிக்கிழமை சுழிபுரத்தில் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், நேற்றுப் பளைப் பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## நேற்று மட்டும் 704 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### 17 ஆயிரத்தையும் கடந்தது பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மேலும் 704 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஏற்கெனவே அடையாளம்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் 19

## யாழ்.மாவட்டத்தில் 600 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

06ஆம் பக்கம் பார்க்க

### அதிகளவான பயணிகளை ஏற்றியதால்

## தனியார் பேருந்தின் சாரதி, நடத்துநர் தனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றி சேவையில் ஈடுபட்ட தனியார் சிற்றூர்தி ஒன்றிற்கு தனிமைப்படுத்தலுக்கான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் நடத்துநரும் தனிமைப்படுத் 19

### பெண்ணின் கழுத்தில் கத்தி வைத்து

## 12 பவுண் தாலி, பணம் கொள்ளை

### யாழ்.நகரில் பயங்கரம்

19ஆம் பக்கம் பார்க்க

### புலமைப்பரிசில் பரீட்சையில்

## 200 புள்ளிகளை பெற்ற மாணவர்கள்

(கொழும்பு)

ஒக்ரோபரில் நடத்தப்பட்ட தரம் 5 19

## கொரோனா சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகள் தயார் நிலையில்

### சுகாதார அமைச்சு

3ஆம் பக்கம் பார்க்க

## கனகபுரம் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணி முன்னெடுப்பு

### சிறீதரன் எம்.பியிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தை துப்புரவு செய்த பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உள்ளிட்டோரிடம



19

### நல்லூர், செல்வச்சந்நிதி

## ஆலயத்துக்குள் பக்தர்கள் உள்நுழையத் தடை

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் தொண்டை 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டு மக்களை முன்னிறுத்தியே அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும்

## பெப்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும்போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாசைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும் என்று பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட ஆணைக்குழுவின் செயலாளருக்கு பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அனுப்பி வைத்திருக்கும் கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

அண்மைக் காலத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 42 வருடகாலத்தில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட அரசியலமைப்பிற்குப் பதிலாக அனைவருக்கும் பொருத்தமானதும் நீண்டகால நோக்கிலானதுமான புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது அவசியம் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

அதற்காக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போதைய அரசாங்கம் விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்தமை வரவேற்கத்தக்கதாகும். எனினும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றோம்.

அதன்படி, புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாசைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும் என்றார். (ஞா)

# சிறை உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

உடனடியாகஅமுலுக்குவரும் வகையில் இந்த விடுமுறைகள் அனைத்தும் இரத்து செய்யப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துசார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் காலை 8.00 மணிக்கு அனைத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், அதிகாரிகளும் தங்கள் எது பணியிடங்களுக்கு தவறாது சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியே செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை நேற்று நள்ளிரவு முதல் நீக்கப்படுவதுடன், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் வழமைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# வவுனியா கூமாங்குளத்தில் இளைஞன் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் இரவு கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை இளைஞர்கள் சிலர் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்விரோதம் காரணமாக குறித்த தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா - 299)

# ஆபத்தான மூன்று மாவட்டங்களில் பி.சி.ஆர் ஆய்வுகூடங்கள் இல்லை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுவது தொடர்பான ஆபத்தான பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள குருநாகல், கேகாலை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பி.சி.ஆர் பரிசோதனைகளை நடத்துவதற்கான ஆய்வுக்கூடங்கள் இல்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொகுப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

தற்போது 20 அரச வைத்தியசாலைகளிலும், 5 தனியார் வைத்தியசாலைகளிலும், இராணுவ வைத்தியசாலையிலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கான ஆய்வுக்கூடம் இல்லை. ராகமை வைத்தியசாலையில் தினமும் சுமார் 100 பேருக்கு இரண்டு தடவைகள் பரிசோதனைகளை நடத்துவதற்கான உபகரணம் உள்ளது.

அனைத்து வைத்தியசாலைகளிலும் நாளொன்றுக்கு 7 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகளே நடத்தப்படுகின்றன. கொரோனா வைரஸ் பரவி வரும் வேகத்தில் இந்த எண்ணிக்கையானது எந்த வகையிலும் போதுமானதல்ல.

இதனால் எண்ணிக்கை அதிகரிப்பதால் கட்டாயமான தேவை இருப்பதாக சுகாதார அமைச்சிடம் சுட்டிக்காட்டியதாகவும் மருத்துவர் ஹரித அளுத்கே குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# கோப்பாய் துயிலுமில்லப் பகுதி முன்னணியினரால் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல சுற்றாடல் பகுதியை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று சுத்தம் செய்தனர். இதன்போது சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் சென்று அதை தடுக்க முயன்ற போதும், முன்னணியினர் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், துயிலுமில்லத்திற்கு எதிரில் விவசாய காணியில் கடந்த சில வருடங்களாக அஞ்சலி நிகழ்வு நடந்து வருவது வழக்கம்.

அந்த பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளும் பணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஈடுபட்டனர். முன்னணியின் இரண்டு எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் இருவரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த நிலையில் கோப்பாய் பொலிசார் அங்கு வந்து சிரமதான பணிக்கு தடைவிதிக்க முயன்றனர். இதனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கும், பொலிஸாருக்குமிடையில் தர்க்கம் உருவானது. இதன்போது கஜேந்திரகுமார் எம்.பியை சிவில் உடையில் பொலிஸார் ஒருவர் காணொளி எடுக்க முனைந்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அவரது ஆளடையாளத்தையும் பரிசோதித்தார்.

சிரமதானத்தில் ஈடுபடுபவர்களின் பெயர் விபரத்தை பொலிஸார் பதிவு செய்ய முயன்ற போது, அதற்கும் முன்னணி எதிர்ப்பு தெரிவித்தது.

இறுதியில் பொலிஸார் அங்கிருந்து விலகிச் சென்றனர். சிரமதானப்பணி தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம்.

(4552)

வவுனியா. 076 328 7119



கண்ணீர் அஞ்சலி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆனைமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட புவனாம்மாள் அவர்களுடைய கணவரும் 20 ஆவது தேசிய மாணவர் படையணியின் ஆரம்பகால கர்த்தாவுமாகிய

( F குழு கொமாண்டர் )

மேஜர் சந்திரசிறி ஆரியநந்தா அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

தர்மசிறி ஆரியநந்தா

அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 06.02.1937

இறப்பு 13.11.2020

(4651)

20 ஆவது தேசிய மாணவர் படையணி அதிகாரிகள், யாழ்ப்பாணம்.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை மீறுகிறது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(வவுனியா)

**இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தத்தை இலங்கை மீறுகிறது என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.**

இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தம், 1987 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே ஜூலை 29, ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தத்தின்படி, நிலத்தை விநியோகிக்கும் அதிகாரம் வடமாகாணத்திற்கு தான் உள்ளது.

வட மாகாணத்திலிருந்து சிங்களவருக்கு எந்த நிலங்களையும் விநியோகிக்க இலங்கைக்கு எந்த அதிகாரமும் இல்லை.

இது சர்வதேச ஒப்பந்தத்தின் மொத்த மீறலாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை பல ஆக்க பூர்வமான விடயங்களைச் செய்ய புவி-அரசியல் அழுத்தத்தில் உள்ளது.

சிங்களவருக்கு நிலங்களை விநியோகிப்பது இலங்கையில் சர்வதேச ஈடுபாட்டை துரிதப்படுத்தும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பலர், விவ சாயம் செய்யவோ, வீடு கட்டவோ எந்த நிலமும் இல்லாமல் தவிக்கிறார்கள். ஏனென்றால் இலங்கை இராணுவத்தால் பல தமிழரின் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவும், இந்தியாவும் தமிழருக்கு அரசியல் தீர்வைக் காணும் வரை அரசாங்கம் காத்திருக்க வேண்டியது நல்லது. இந்த தீர்வுக்கு அமைதி தரக்கூடிய ஒரேவழி இதுதான்என மேலும் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# நள்ளிரவில் வாள்வெட்டு இளைஞர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் -தவசிகுளம் பகுதியில் தீபாவளி தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு வாள் வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

## யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக பேராசிரியர் பிலேந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராக வாழ்நாள் பேராசிரியர் அருட்திரு. ஞானமுத்து பிலேந்திரன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாழ்நாள் பேராசிரியர் பிலேந்திரன் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ துறையில் நீண்ட காலம் தலைவராகப் பணியாற்றியவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (5-4-33)

# வைத்தியசாலைகள் தயார் நிலையில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலும் பல வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அசேல குணவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

"தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலைகளில் 2 ஆயிரத்து 800 கட்டில்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை யளிப்பதற்கு மேலதிக தேவையேற்படின், குறித்த வைத்திய சாலைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை நாடு முழுவதிலும் உள்ள 36 மத்திய நிலையங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது" என தெரிவித்தார். (ஜ-4)

## நெருக்கடியிலும்

# கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அர சாங்கம் நெருக்கடியான சூழ்நிலையிலும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளது என்றும் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சான் நிஷாந்த தெரிவித்தார்.



உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமா?, பொதுஜன பெரமுன அரசாங்கமா? அல்லது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான அரசாங்கமா? என தெரியாது. உலக வல்லரசு நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு கொவிட்-19 வைரஸ் தாக்கம் பிரதான காரணியாக இருந்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் நெருக்கடியான சூழ்நிலையிலும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனா விதி மீறல் 20 பேர் கைது

(கொழும்பு)



பாதுகாப்பு முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற விதிமுறைகளை மீறி செயற்பட்ட மேலும் 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய, கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையிலான காலப் பகுதியில் 221 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை பிரிட்டன் வழங்கும்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியபோதும் வளரும் நாடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி வரிச்சலுகைகளை பிரித்தானியா தொடர்ந்தும் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வளரும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான கட்டணங்களை நீக்குதல் மற்றும் குறைத்தல் ஆகியவை தொடரும் என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பியின் கீழ் உள்ள அனைத்து நாடுகளும் பிரித்தானியாவின் சலுகைகளை தொடர்ந்தும் பெறுவதற்கு தகுதியைப் பெறுவதாக பிரித்தானியாவின் சர்வதேச வர்த்தக செயலாளர் லிஸ் ட்ரஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை உட்பட்ட நாடுகளுக்கு இடையிலான வணிக நடவடிக்கைகள் எந்த வித இடையூறும் இல்லாமல் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 7 நாட்களில்

## 3 ஆயிரத்து 164 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் வரையான கடந்த 7 நாட்களில் தினசரி சராசரி452 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஒரு வாரத்தில் மொத்தம் 3 ஆயிரத்து 164 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி அதிகளவான 510 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

9ஆம் திகதி - 356, 10 ஆம் திகதி - 430, 11 ஆம் திகதி - 635, 12 ஆம் திகதி - 373, 13 ஆம் திகதி - 468 பேர் தொற்றுக்குள்ளாகினர்.

நேற்று முன்தினம் 14 ஆம் திகதி சனிக்கிழமை- 392 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் ஒரு வாரத்தில் 3,164 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஒரே குடும்பத்தில் ஏழு பேருக்கு தொற்று

(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொம்பே பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த குடும்ப உறுப்பினரில் ஒருவர், துறைமுகத்தில் பணியாற்றுபவராவர். இந்நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவரது குடும்ப உறுப்பினர் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளிலேயே குறித்த 7 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புகளை பேணிய 10 குடும்பங்களை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஜ-4)

# திருமலை கடலில் மூழ்கடிக்கப்பட்ட பஸ்கள்

(திருமலை)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பழைய பஸ்களை திருகோணமலை கடற்பகுதியில் நீரில் மூழ்கடிக்கும் செயற்பாடு நேற்று இடம்பெற்றது.



கடலில் குப்பைகள் சேர்வதை தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை உலக நாடுகள் மேற்கொண்டிருக்கும் நிலையில் கடல் வளங்களை பாதுகாப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது வழமையாகும்.

இதற்கு முன்னரும் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய கப்பல்கள் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய குண்டு துளைக்காத வாகனங்கள் என்பன நீர்கொழும்பு கடற்பரப்பில் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

இவற்றை திருத்துவதற்கு அதிக செலவுகள் ஏற்படும் என்பதாலும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதும் வழமையானதாகும்.

சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகவே இச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. (ஜ-4)

# கொரோனா அச்சுறுத்தல் நாமல் முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாழ வேண்டிய தேவை அனைவருக்கும் தற்போது ஏற்பட்டுள்ளதென இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனாவால் இன்று உலகமே பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

அதற்காக மக்கள் தமது அன்றாட கடமைகளிலிருந்து விலகியிருக்க முடியாது.மேலும், இவ்விடயங்கள் தொடர்பாக அரச பொறிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை பௌதீக வள அபிவிருத்தியுடன் இணைந்ததாக, ஆளணி வள அபிவிருத்தியையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

மேலும், தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி ஆளணி வளத்தையும் அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் அபிலாஷையாகும்" எனச் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# நுரைச்சோலை மின்சார நிலையத்தில் ஒரு அலகு மாத்திரமே சேவையில்

(கொழும்பு)

நுரைச்சோலையில் உள்ள லக்விஜய நிலக்கரி மின்சார நிலையத்தின் ஒரு அலகு மட்டுமே தற்போது செயற்பட்டு வருகிறது.

இது நாட்டில் 600 மெகாவோட் மின்சாரப் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த மின்சார நிலையத்தில் மூன்று அலகுகள் உள்ளன. அவை மூன்றும் ஒன்றாக தேசிய ரீதியில் 900 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

எனினும் கடந்த வார மத்திய பகுதியில் ஒரு கொதி கலன் குழாயில் ஏற்பட்ட கசிவுக்குப் பின்னர் இரண்டு அலகுகள் மூடப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அவற்றை திருத்தியமைக்க இரண்டு வாரங்கள் ஆகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் லக் விஜயவின் மூன்று அலகுகளிலும் பழுது ஏற்பட்டு நாடு பூராக மின்சார துண்டிப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பிலிப்பைன்ஸை தாக்கிய "வாம்கோவால்" 53 பேர் பலி; 22 பேர் மாயம்



(பிலிப்பைன்ஸ்)

தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸில் வீசிய கடும் சூறாவளி காரணமாக இதுவரை 53 பேர் உயிரிழந்துள்ளதோடு 22 பேர் காணாமல் போயுள்ளனர்.

மணிக்கு 130 கிலோ மீற்றர் முதல் 235 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்த புயலுக்கு "வாம்கோ" என பெயரிடப்பட்டுள்ளது.

இதேவேளை மணிலாவில் இருந்து 35 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புலாக்கன் மற்றும் பம்பங்கா ஆகிய மாகாணங்களிலும் இந்த புயல் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த புயலால் இதுவரை 53 பேர் உயிரிழந்துள்ளனர். 22 பேர் மேலும் மாயமாகியுள்ளனர்.

புயல் காரணமாக மின்சார துண்டிப்பு ஏற்பட்டுள்ளதால் 30 இலட்சம் பேர் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளனர்.

இந்த ஆண்டில் மாத்திரம் பிலிப்பைஸில் 21 முறை சூறாவளி தாக்கியுள்ளதாக வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொரோனாத் தடுப்பு மருந்துகள் கொள்முதலுக்கு முன்னணி நாடுகள்

கொரோனா தடுப்பு மருந்துகள் விரைவில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த மருந்துகளை கொள்முதல் செய்வதற்கு முன்னணி நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன.

உலக நாடுகளை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்துகளை கண்டறியும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் கொரோனா தடுப்பு மருந்துகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன.

ரஷ்யாவின் "ஸ்புட்னிக் வி" என்ற தடுப்பு மருந்து விரைவில் சந்தைக்கு வரவுள்ளது.

முன்னணி நிறுவனங்களின் கொரோனா தடுப்பு மருந்துகள் விரைவில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த மருந்துகளின் மொத்த உற்பத்தியில் பெரும்பாலான மருந்துகளை பெறுவதற்கான ஒப்பந்தங்களை வளர்ந்த நாடுகள் பெற்றுவிட்டன.

அஸ்ட்ரா ஜெனேகா, நோவாவேக்ஸ், சனோபி ஜிஎஸ்கே, பைசர், பயோன்டெக் ஆகிய மருந்துகளை பெறுவதற்கு அதிக அளவில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா வைத்தியசாலையில் தீ 10 பேர் உயிரிழப்பு; 7 பேர் காயம்


(ருமேனியா)

ருமேனியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் பின்னர் அதை அண்டிய அறைக்கு தீ பரவியது என்றும் இதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மருத்துவர் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# தேசப்பிரியவுக்கு புதிய பதவி?



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெறவுள்ள மகிந்த தேசப்பிரிய, தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவில் தலைவராக நியமிக்கப்படலாம் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் தவிர சுயாதீன ஆணைக் குழுக்கள் பலவற்றின் தலைவர் பதவிகளுக்குத் தகுதியான பலரை அரசாங்கம் தெரிவு செய்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஈவா வனசுந்தர நியமிக்கப்படவுள்ளார். அரச சேவை ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் டி.ஜே. டி.எஸ்.பாலபட்டபெந்தி நியமிக்கப்பட உள்ளார்.

அரச நிதி ஆணைக்குழுவின் தலைவராக அமைச்சரவையின் முன்னாள் செயலாளர் சுமித் அபேசிங்கவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவும் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் ஆளுநரான கலாநிதி ஜயத் பாலசூரியவும் நியமிக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# மழையுடனான வானிலை சில நாட்களில் அதிகரிக்கும்



(கொழும்பு)

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களில் சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஜ-4)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 05 மத்தியூஸ் வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 41/10 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் அரசமுத்து பெண் றெபேக்கா எனும் பெயரில் வரி மதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு C.C.S. பற்றிக் முகதாவில் 22.06.1984ம் திகதி 1608 ம் இலக்கத்தில் ஓர் அறுதி உறுதி நிறைவேற்றப்பட்டு ஆயர் இல்லம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பஸ்ரியாம்பிள்ளை தியாகுப்பிள்ளை என்பவர் பிரான்ஸிஸ் யோசேப் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

எனினும் குறித்த 1608ம் இலக்க உறுதியில் தாயுறுதி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த 1608ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 21.10.1984 திகதியில் 5177 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் இல 41/10, மத்தியூஸ் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் யோசேப்பும் பெண் றீற்றாவும் இல 372, பாங்ஷால் வீதி, சின்னவன் நவரத்தினமும் பெண் புஸ்பலீலாவும் அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்துள்ளனர்.

பின்னர் குறித்த 5177ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தரிசு க. சிவலிங்கம் முகதாவில் 15.02.1987 ம் திகதியில் 6590 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் இல 372, பங்ஷால்வீதி, சின்னவன் நவரத்தினமும் பெண் புஸ்பலீலா இல 6/1 மத்தியூஸ் வீதி, யோகு அன்றூ பிறிடெறிக் ஜெயராஜாவும் பெண் ஜோய்ஸ் ஜெயராஜாவுக்கும் அறுதியாக விற்று உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த 6590ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு V.T.சிவலிங்கம் முகதாவில் 23.09.2005ம் திகதியில் 607ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதியில் மத்தியூஸ் வீதி இலக்கம் 6/1 ஐச் சேர்ந்த ஜோகு அன்ட்றூ பிறட்றிக் ஜெயராசாவும் பெண் ஜொய்சி ஜெயராசாவும் ஆகியோர் ஜோசேப் தர்மநாயகம் இராஜேந்திரன் பெண் பெலிசியாவுக்கு சீதனமாக வழங்கி உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 607ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 27.02.2017 ம் திகதியில் 6925 ம் இலக்க அறுதி உறுதியில் இலக்கம் 6/1, ஐச் சேர்ந்த யோகு அன்றூ பிறட்றிக் ஜெயராசாவும் பெண் ஜொய்சியும் ஆகியோர் மற்றும் அதேயிடத்திலிருந்து தற்காலம் கனடாவில் வசித்து வரும் யோசெப் தர்மநாயகம் இராஜேந்திரனும் பெண் பெலிசியாவும் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி இல 15/19, ஐச் சேர்ந்த ஜோசெப் சில்வெஸ்ரர் ஞானதாசும் பெண் தர்மினி யசிந்தாவும் ஆகியோருக்கு அறுதியாக விற்பனை செய்துள்ளனர்.

ஆதனடாப்பு:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டுக்குளி கோவிற் பற்று, சுண்டுக்குளி இறை 'குளத்துவயலும் மறுபிரிவுகளும்' நில. பர .1குழி 0.62 இதனை 2016.12.18ம் திகதிகளில் அளவையாளர்கள் மெல்வின் ஞானப் பிரகாம் அவர்கள் அளந்து வரைந்த 2716ம் படத்தில் துண்டு 1 எனும் பாகம் விஸ்தீரணம் நில. பர (1) ஒன்றும் குளி (00.70) சைபர் சைபர் தசம் ஏழு சைபரும் கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை :-

கிழக்கு:- வாய்க்காலுடன் சேர்ந்த றோட்டு .

வடக்கு :-மாணிக்கம் கணேசின் ஆதனம் .

மேற்கு:- எம்.தம்பிப்பிள்ளை யோசப்பின் ஆதனம்.

தெற்கு:- தம்பிப்பிள்ளை பாலதாசின் ஆதனம் இதடங்களும்.

தற்போது ஜோசப் சில்வெஸ்டர் ஞானதாஸ்சும் பெண் தர்மினி யசிந்தாவும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வா தனத்திற்கு / இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜோ. ஞானதாஸ் பெண் தர்மினி யசிந்தா எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மனுவல் ஆனோல்ட்
முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-687)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,புத்தூர் தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2021

1. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 2020.11.16 - 2020.11.30 நண்பகல் 12.00 மணி வரை**

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 2020.11.30 பி.ப 14.00 மணி வரை**

**கேள்விதிறக்கும் திகதி: 2020.11.30 பி.ப 14.30 மணி**

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.
4. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளைஅலுவலகம் வடமாகாணத்தில் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப் பணமாக ரூபா 25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்தியவிலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் / கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 2 | திண்மக் கழிவ கற்றல் முகாமைத்துவ நிலையம், கைதடி நீர்வேலி இணைப்பு வீதி, நீர்வேலி | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 3 | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 4 | அச்சுவேலி கொள்களம். அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| | மொத்தம் | 04 | 04 | |

தலைவர்,
உள்ளூராட்சி பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

(C-681)

# யாழ்.மாவட்டத்தில் 600 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில்

## அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடியாக தொடர்புபட்ட மற்றும் தொற்றுக்குள்ளானவர்களுடன் பயணித்த சுமார் 600 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நேற்றைய தினம் மேலும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்தவர் எனவும் குறித்த நபரிடம் நேரடியாக தொடர்பு கொண்டவர்களை தொடர்ச்சியாக தனிமைப்படுத்தி பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் சுய தனிமைப்படுத்தப்படுபவர்கள் பி.சி.ஆர்.பரிசோதனையின் பின்னர் தனிமைப்படுத்தலிருந்து சுகாதார பிரிவினரால் படிப்படியாக விடுவிக்கப்படுகிறார்கள்.

அத்துடன் ஏற்கனவே தொற்று அச்சம் காரணமாக முடக்க நிலையில் இருந்த மூன்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய சுமார் 600 குடும்பங்கள் இன்றைய புள்ளிவிபரத்தின்படி சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலைமை யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்தோரின் எண்ணிக்கையை விட சற்று குறைவாகவே காணப்படுகிறது.

பொதுமக்கள் தொடர்ச்சியாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தேவையற்ற பயணங்கள் மற்றும் ஒன்றுகூடல்களையும் தவிர்ப்பதன் மூலமே, யாழ்.மாவட்டத்தில் தொற்று ஏற்படாது கட்டுப்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். (5-4-33)

# கடும் காற்று படகு சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மயிலிட்டி கடற்பரப்பில் நேற்று அதிகாலை வீசிய கடும் காற்று காரணமாக மீனவர் ஒருவருக்கு சொந்தமான ரோலர் படகு ஒன்று சேதமடைந்துள்ளது. சுமார் 15 இலட்சம் பெறுமதியான குறித்த படகு நீரில் மூழ்கியதில் இயந்திரம் மற்றும் படகின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.

மயிலிட்டி துறைமுகத்தின் கட்டுமான வேலைகளில் காணப்படும் குறைபாடு காரணமாகவே படகு சேதமடைந்துள்ளதாக மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்க தலைவரும் படகின் உரிமையாளருமான சுப்பிரமணியம் சியசிங்கம் தெரிவித்துள்ளார்.

சுமார் 30 வருடங்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்பு குறித்த பகுதியில் மக்கள் மீள் குடியேறியதன் பின்பு, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் துறைமுகத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கட்டுமானப்பணிகள் சீரான முறையில் நடைபெறாமையால் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-18-33)

# யாழ்.போதனா வைத்தியசாலை சிகிச்சை பிரிவுகளில் மாற்றம்

## பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சைகள் இன்று 16 ஆம் திகதி முதல் விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் மகப்பேற்று பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவுகள் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டு இன்று முதல் இயங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்றையதினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் எவ்வித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைபெறுவதோடு நோயாளர்கள் வந்தவண்ணம் உள்ளனர்.

தற்போது கொரோனா வைரஸ் காரணமாக சமூக இடைவெளியினைப் பேணும் வகையில் கிளினிக் நடைபெறும்.


அந்த வகையில் கடந்த சில மாதங்களாக தனிப்பட்ட பிரிவில் இயங்கி வந்த மகப்பேற்று பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவுகள் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டு இன்று முதல் இயங்கவுள்ளன.

மேலும் இருதய சிகிச்சைக்குரிய கிளினிக் விக்ரோரியா வீதியில் உள்ள கிளினிக் கொம்பக்சில் இன்று முதல் நடைபெறவுள்ளது.

எனவே நோயாளிகள் அங்கு வந்து வைத்திய ஆலோசனைகளைப் பெற்று மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் நோயாளர்களின் நெருக்கத்தினை குறைத்துக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (5-4)

# ஆதனங்களை ஒப்படைக்க 2 வாரகால அவகாசம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபைக்குச் சொந்தமான பல சொத்துக்களை தனியார்கள் கையகப்படுத்தி இருப்பதாக பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேசசபைக்குச் சொந்தமான பல ஆதனங்களை தனியார் கையகப்படுத்தி இருப்பதை எமது ஆவணங்களைஅடிப்படையாகக் கொண்டு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சபைக்கு உரித்தான மேய்ச்சல் தரவைகள், பொதுக் கிணறுகள் மற்றும் காணிகள் ஆகியன இவ்வாறு தனியாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது இது தொடர்பான தகவல்களைத் திரட்டி இருப்பதுடன் அதற்கான ஆவணங்களையும் கையில் எடுத்துள்ளோம்.

இவ்வாறு பிரதேசசபைச் சொத்துக்களை கையகப்படுத்தி இருப்பவர்களுக்கு கௌரவமான முறையில் கால அவகாசத்தை வழங்க சபை முடிவெடுத்துள்ளது.

இரண்டு வார காலத்துக்குள் சபையின் சொத்துக்களைக் ஒப் படைக்க வேண்டும்.

ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் எங்களிடம் இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்களை கையகப்படுத்தியிருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# பழுதடைந்த தெருவிளக்குகள் மாற்றப்படவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடையும் தெரு விளக்குகளை மாற்றுவதற்கான அனுமதியை நகரசபையின் மின்னியலாளருக்கு வழங்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று மாத காலமாக பழுதடைந்த தெரு விளக்குகள் மாற்றப்படாமல் இருக்கின்றன.

எனவே இதற்கு நகரசபை நிரந்தரமான தீர்வு ஒன்றினை எடுக்க வேண்டும். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடையும் தெரு விளக்குகளை மாற்றுவதற்கான அனுமதியை நகரசபையின் மின்னியலாளருக்கு வழங்க வேண்டும். இது தொடர்பான கோரிக்கைக் கடிதத்தினை உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)



விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டக்குழுமத்தின் முதலாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு "KM Production" நிறுவனத்தினருடன் இணைந்து "கொடை" எனும் குறுந்திக்கொடைக்கான பாடலினை வெளியிட்டுள்ளனர்.

# போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2021

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2021 ஆம் ஆண்டிற்குப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து பின்வரும் வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2021" எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2020.12.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோ பிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடையரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சுகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள்,DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சுகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தின முத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயு ரெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திர சிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டல் விரிப்பு, தலையணை உறை,GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & othersuch things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திர சிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / x கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்பட பிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சுலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயு அடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சுகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார,குளிரூட்டிதிருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சுகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டட நிர்மாணம், கட்டட புனரமைப்பு, கட்டடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மான வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்புமற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

**நிபந்தனைகள்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2021 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாதகால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
09. உருப்படி இலக்கம் B[அறுவைசிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள்] க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்.

தயாரிப்பு எல்லை **[Product range]**

உற்பத்தியாளர் அங்கீகாரக்கடிதம் **[Copy of manufacturer authorization letter] CDDA** நகல்

நிறுவுதல் அடிப்படை - **[Installation Base]** (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

*மாதிரி விண்ணப்படிவம்*

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுக்கட்டளைஇல: | |
| திகதி: | |
| தொகை | |

வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

1.நிறுவனத்தின் பெயர் :

2.நிறுவனத்தின் முகவரி :

3.தொலைபேசி இல. :

4.தொலைநகல் இல. :

5.மின்னஞ்சல் முகவரி :

6.வியாபாரப் பதிவுபெயர் :

(வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

7.VAT:பதிவு இலக்கம் :

8.கடன் வசதிபற்றியவிபரம் (காலஎல்லை/தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவைவிபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா...க்குரிய பற்றுசீட்டு/காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.


............................
விண்ணப்பதாரியின் பெயர்
நிறுவன இறப்பர் முத்திரையும்

............................
விண்ணப்பதாரியின் ஒப்பமும்

................
திகதி

(C-686)

# மீன்வளர்ப்பு பண்ணையால் வீடுகளுக்குள் வெள்ளம்



(மன்னார்)

மன்னார் சௌத்பார் கிராமப் பகுதியில் அமைந்துள்ள மீன் வளர்ப்பு பண்ணையினால் முழுக் கிராமமும் நீரில் மூழ்கியதுடன் உப்பு நீரும் கிராமத்துக்குள் உள்நுழைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் சௌத்பார் கிராம உத்தியோகத்தர் பிரிவு கடல் களப்பு பகுதியில் அமைக்கப்பட்ட மீன் வளர்ப்பு பண்ணையினாலும் குறித்த மீன்வளர்ப்பு பண்ணையின் வடிகால் அமைப்பு மற்றும் கால்வாய் அமைப்பு காரணமாக குறித்த கிராமத்தில் பெய்யும் மழை வெள்ளம் வடிந்தோடி கடலுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் குறித்த கிராமம் நீரில் மூழ்கியுள்ளது.

அதே நேரத்தில் வெள்ளம் வீடுகளுக்குள்ளும் புகுவதுடன் தமது வாழ்வாதாரமான தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக மக்களால் மன்னார் பிரதேச செயலகம் மற்றும் நகர சபை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் நகர சபை உறுப்பினர்களால் தற்காலிகமாக நீர் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரச்சினையை தற்காலிகமாக தீர்த்து வைத்துள்ளனர்.

அத்துடன் அமைக்கப்பட்ட மீன்வளர்ப்பு பண்ணை மற்றும் அவற்றிற்கான அனுமதிகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட கிராம மக்கள் மற்றும் சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் பண்ணை உரிமையாளருடனான விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு குறித்த பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என பிரதேச செயலக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# கண்டல் தாவர நடுகை



(மன்னார்)

கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனைப்பகுதியில் கடல் சார் வளங்களை பாதுகாக்கும் வகையில் கடற்கரையோர பகுதியில் கண்டல் தாவரங்களை நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் திருமதி தஸ்சினி லகந்தபுர , கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வடக்கு- கிழக்கு பொறுப்பதிகாரி ரி.சிறிபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிராம உத்தியோகத்தர்,பொலிஸ் அதிகாரி, வன வளத்திணைக்கள அதிகாரிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டு கண்டல்தாவரங்களை நாட்டி வைத்தனர். (5-4-315-316)

# பள்ளத்தில் வெள்ளம் பாதிக்கப்படும் நோயாளர்கள்

தற்போது பெய்துவரும் பருவ மழைகாரணமாக தருமபுரம் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி உட்செல்லவோ வெளியில் செல்லவோ முடியாதபடி வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக உள்ள வைத்திய சாலை தருமபுரம் வைத்திய சாலையாகும். இவ் வைத்தியசாலையில் 15 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சேவையைப் பெற்றுவருகின்றனர். வைத்தியசாலையின் முற்பகுதியில் (முற்றம்) காணப்படும் பள்ளம் காரணமாகவே



மழை வெள்ளம் தேங்கி காணப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் உட்செல்லவும் வெளிச் செல்லவும் அவதிப்படுகின்றனர்.எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-316)

# நேசக்கரம் அமைப்பின் தேவையறிந்த சேவை



(வவுனியா)

மைக்கலின் நேசக்கரம் ஊடாக வவுனியாவில் மலசல கூடத்தின் குழியில் வீழ்ந்து உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு ஒரு தொகை பணம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் அடிப்படை வசதிகளின்றி சிறு குடிசையில் மூன்று பிள்ளைகளுடன் மிகவும் வறுமையான நிலையில் வாழ்ந்து வந்த நிலையில் குறித்த குடும்பத்தில் பிள்ளை ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை மலசலகூடத்திற் காக வெட்டப்பட்ட குழினுள் தவறி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தது.இக் குடும்பத்திற்கு நேசக் கரம் அமைப்பால் பண உதவி வழங்கப்பட்டுள்ளது. (5-4-60)

# தரமற்ற முகக்கவசங்களுக்கு சுகாதாரப் பகுதியினரால் தடை

(குருமன்காடு)

கொவிட்-19 இன் தாக்கம் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் "கொவிட் -19 தாக்கம் அற்ற வவுனியாவை கட்டியெழுப்புவோம்" எனும் எண்ணக் கருவில் வவுனியா மாவட்ட சுகாதார பிரிவினர் தரம் குறைவான முகக்கவசங்களை விற்பனை செய்ய தடை விதித்துள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தரம் குறைவான முகக்கவசங்கள் சில வர்த்தக நிலையங்களில் இருந்து சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டதுடன், குறித்த வர்த்தக நிலையங்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (5-4-250)

# மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் விடப்பட்டன

(கிளிநொச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய ஒரு தொகை கொடுவா மீன் குஞ்சுகள் நீர்நிலைகளில் விடப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இரணைதீவு, கௌதாரிமுனை, மூன்றாம் பிட்டி, இலுப்பைக்கடவை, நாயாறு மற்றும் விடத்தல் தீவு ஆகிய பகுதிகளிலுள்ள நீர்நிலைகளில் கொடுவா மீன் குஞ்சுகள் விடப்பட்டன. (5)




குப்பிழானைப் பூர்வீகமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்- பறுவதம் குமாரசாமியின் 31 ஆவது நினைவு நாளில் அவரது பிள்ளைகளால் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. (படம்-ரவிசாந்)



# வீதி திருத்தப் பணிகள் ஆரம்பம்

(நெளுக்குளம்)

செட்டிகுளம் மெனிக்பாம் பிரதான வீதிக்கான திருத்த பணிகள் நேற்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு இலட்சம் வீதிகள் புனரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் செட்டிகுளம் மெனிக்பாம் பிரதான வீதி 65 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2.7 கிலோ மீற்றர் வீதிக்கான காப்பெற் அமைக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக் கப்பட்டது. குறித்த வீதிக்கான நிதி ஒதுக்கீட்டினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கா.மஸ்தான் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# இராசிபலன்

16.11.2020
கார்த்திகை 01, திங்கட்கிழமை,
பிரதமை முற்பகல் 9.27 மணிவரை
அனுசம் மாலை 5.45 மணிவரை
சுபநேரம் 12.07-1.57 மணிவரை
இராகுகாலம் 7.37-9.07 மணிவரை
சந்திராஷ்டமம் -அச்சுவினி,பரணி

வளவன்

**மேஷம்** — கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்** — குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கடன் தொல்லைகள் அகலும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**மிதுனம்** — வியாபார விருத்தியுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**கடகம்** — மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள்,எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், வழிபாடு மகத்துவம் தரும், போசன சுகமுண்டு.

**துலாம்** — புதிய பாதை புலப்படும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**விருச்சிகம்** — உறவினர் பகை அகலும், முன்னேற்றம் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் சம்பந்தமான அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது,சுபவிரயங்கள் கூடும் நாள்.

**மகரம்** — வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** — என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** — தடைகள் விலகி தனவரவு கிடைக்கும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

எல்லாமே எட்டியிருந்து பார்க்கும்போது அழகாகத்தான் இருக்கும்.

# கடல் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் உதவ வேண்டும்

(கொழும்பு) கொரோனா பரவலால் நாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர்.



பேலியகொட மீன் சந்தையில் கொரோனா தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து மக்கள் கடல் உணவுகளை கொள்வனவு செய்யாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய கடற்றொழில் உதவியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிரம்பல் செய்யப்படும் கடல் உணவுகளில் 70 சதவீதத்தை அவர்கள் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாழ்வாதாரத்தை இழந்துள்ள கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் உதவிகள் துரிதமாகக் கிடைக்க வேண்டும்என மேலும் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிக வெப்பநிலையுடனான மீன்களின் ஊடாக கொரோனா பரவாது என சுகாதார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


## பேருந்து சாரதி நடத்துநர் கைது

(கொழும்பு)

பேருந்தில் சமூக இடைவெளியை உறுதி செய்யத்தவறிய குற்றச்சாட்டில் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டனர். கொழும்பிலிருந்து மதுகம வரை இயங்கும் பேருந்தொன்றில் சமூக இடைவெளி பின்பற்றப்படவில்லையென பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் பயணிகளால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பேருந்தை சுற்றிவளைத்த பொலிஸார் சாரதி மற்றும் நடத்துநரைக் கைது செய்ததுடன், குறித்த பேருந்தையும்கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஐ-4)

## பேருந்துகளுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுகின்ற நிலைமையிலும் நாட்டின் சில பகுதிகளில் அதிக பயணிகளுடன் பேருந்துகள் பயணிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனை கண்காணிப்பதற்காக குழுக்களை நியமித்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களுடன், பேருந்துகளின் இருக்கைகளுக்கு ஏற்ப பேருந்துகள் பயணிக்கின்றதா என்பது தொடர்பாக குறித்த அதிகாரிகள் கண்காணிக்கவுள்ளனர்.

இதேவேளை, சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகளை இன்று முதல் மீண்டும் முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

## போகம்பரை சிறையால் கண்டிக்கும் ஆபத்து?

(கொழும்பு)

போகம்பரை சிறைச்சாலையில் பரவியுள்ள கொரோனா வைரஸ் காரணமாக கண்டி நகர் பாதிக்கப்படலாம் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

போகம்பரை சிறைச்சாலையில் மேலும் 80 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 125 ஆக அதிகரித்துள்ள நிலையில் குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

சிறைச்சாலை ஊழியர்கள் உணவு போன்றவற்றை பெறுவதற்காக கண்டி நகருக்கு செல்கின்றனர் என்றும் இதன் காரணமாக கொரோனா வைரஸினை கட்டுப்படுத்தாவிட்டால் கண்டிநகர் பாதிக்கப்படலாம் என பொலிஸார் மேலும் எச்சரித்துள்ளனர்.

குறித்த சிறைச்சாலையில் நிலைமை மோசமடைவதால், 100 நோயாளிகளை மட்டும் தனிமைப்படுத்துவதற்கான நிலையம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் சிறையில் 800 இற்கும் அதிகமான கைதிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## 128 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளி நாடுகளில் சிக்கித் தவித்த 128 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

அதன்படி சீனா மற்றும் மத்திய கிழக்கிலிருந்து இலங்கை தூதரக அதிகாரிகள் உட்பட மொத்தம் 128 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.


அதன்படி நேற்று முன்தினம் சீனாவின் ஷாங்காயிலிருந்து 5 பேரும் டுபாயிலிருந்து 59 பேரும் வந்தடைந்ததுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்டார், டோஹாவிலிருந்து 39 பேரும் டுபாயிலிருந்து 25 பேரும் வந்தடைந்தனர் அனைவரும் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# டிசெம்பரில் 2 கோடி அமெரிக்கர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும்

## தடுப்பூசி அமைப்பு அறிவிப்பு

(ஜெனிவா)

**எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 கோடி அமெரிக்கர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுமென தனியார் பங்களிப்புடன் கூடிய அமெரிக்க கொரோனா தடுப்பூசி அமைப்பான ஒபரேஷன் வார்ப் ஸ்பீட் தெரிவித்துள்ளது.**



ஒபரேஷன் வார்ப் ஸ்பீட் அமைப்பின் தலைமை அறிவியல் ஆலோசகர் மோன் செப் சுலோய், நேற்று முன்தினம் வெள்ளை மாளிகை ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு, ஒவ்வொரு மாதமும் குறைந்தது இரண்டரை கோடி அமெரிக்கர்களுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பைசர் மற்றும் மாடர்னா நிறுவனங்கள் உருவாக்கி உள்ள இரண்டு தடுப்பூசிகளும் இறுதிக்கட்ட சோதனையில் உள்ளதாகவும், அவற்றை பயன்படுத்துவதற்கான அவசர கால அனுமதி அடுத்த மாதம் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேர்தலுக்கு பின்னர் முதன் முறையாக வெள்ளை மாளிகையில் உள்ள ரோஸ் கார்டனில் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது, அடுத்த ஆண்டு ஏப்ரலில் கொரோனா தடுப்பு மருந்து அனைத்து அமெரிக்கர்களுக்கும் கிடைக்கும் என கூறியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ-4)

# ட்ரம்புக்கு ஆதரவான பேரணியில் கடும் வன்முறை- பலர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தேர்தல் தோல்வியை ஏற்க ட்ரம்ப் மறுத்து வரும் நிலையில், அவரது ஆதரவாளர்கள் நடத்திய பேரணியில் கடும் வன்முறை வெடித்தது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் ஜோ பிடன், 306 தேர்தல் சபை வாக்குகளை பெற்று ஜனாதிபதி பதவிக்கு தகுதி பெற்றுள்ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஜோ பிடன் பதவியேற்க உள்ளார். கமலா ஹரிஸ் மற்றும் ஜோ பிடன் ஆகியோர் தாம் தெரிவாகியதை அடுத்து நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து விவாதிக்க தொடங்கிவிட்டனர்.



ஆனால் தோல்வியை ஏற்பதற்கு ட்ரம்ப் தயாராக இல்லை. தேர்தலில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக குற்றம் சாட்டிய அவர் இதுதொடர்பாக சட்டப் போராட்டத்திற்கு தயாராகி வருகிறார். அதேசமயம், அவரின் ஆதரவாளர்கள் பேரணி நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு நடந்த இந்த பேரணியில் திடீர் வன்முறை வெடித்தது.

இந்த வன்முறையில் இரு தரப்பிலும் பலருக்கு காயம் ஏற்பட்டது. 10 பேர் கைது செய்யப்பட்டனர். (ஐ-4)

# பராகுவேயுடனான பாதுகாப்பு எல்லையை பலப்படுத்திய ஆர்ஜென்டினா

(அசுன்சியன்)

பராகுவே நாட்டுடனான தனது எல்லையின்பாதுகாப்பை கடுமையாக்க தீர்மானித்துள்ளதாக ஆர்ஜென்டினா அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரித்தானியாவில் உள்ள ஆர்ஜென்டீனாவின் தூதரகம் அதிகாரிகளை எச்சரிக்கும் அநாமதேய குறிப்பு தொடர்பான செய்திகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பராகுவேயிலிருந்து ஆர்ஜென்டீனாவுக்கு அமோனியம் நைட்ரேட்டை அனுப்ப முற்படும் நபர் வடக்கு எல்லையின் ஊடாக நுழையும் சாத்தியம் தொடர்பாக குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்ட நபரை அடையாளம் காண விசாரணையை ஆரம்பித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-4)

# பாரம்பரிய மருத்துவத்திற்கு வித்திடும் சர்வதேச ஆராய்ச்சி மையம் இந்தியாவில் அமைக்கப்படும்

(டில்லி)

பாரம்பரிய மருத்துவ முறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான சர்வதேச மையத்தை இந்தியாவில் அமைக்கவுள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதா னோம் கெப்ரியேசஸ் தெரிவித்தார்.

இந்தியாவில் நிறுவனமொன்றின் விழாவுக்காக காணொளி வாயிலாக வாழ்த்துத் தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச பாரம்பரிய



மருத்துவ முறைகள் ஆராய்ச்சி மையத்தை இந்தியாவில் அமைக்க உள்ளோம் என் பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மையமானது உலக சுகாதார நிறுவனத்தின் கீழ் செயற்படவுள்ளது. பாரம்பரிய மருத்துவ முறைகள் குறித்த விரிவான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல் அவை தொடர்பான விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்துவதில் அந்த மையம் முக்கிய பங்கு வகிக்கும்.

பாரம்பரிய மருத்துவ முறைகளை அனைத்து நாடுகளுக்கும் கொண்டு செல்வதில் பெரும் பங்காற்றும்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# 35 குடிசைகள் தீக்கிரை



(டில்லி)

இந்தியாவின் கொல்கத்தாவின் புதிய நகரத்தில் உள்ள நிவேதிதா பள்ளத்தின் சேரி பகுதியில் அமைந்துள்ள இரு குடிசைகளிலேயே தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த தீப்பரவலால் சுமார் 35இற்கு மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன.

இந்த அனர்த்தம் காரணமாக உயிரிழப்புகள் எதுவும் பதிவாகாத நிலையில், தீப்பரவலுக்கான காரணமும் இதுவரை கண்டறியப்படவில்லை. தீயைக்கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ-4)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

## பதவி வெற்றிடம்

**கருத்திட்ட விவரணம் :-**

01. கொழும்பு சர்வதேச நிதியியல் நகர கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக (துறைமுக நகரம்) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு (இலங்கை அரசாங்கம் சார்பில்), நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சீஎச்சி போர்ட் சிற்றி கொழும்பு பிறைவட் லிமிடெட் (கருத்திட்டக் கம்பனி) ஆகிய மூன்று தரப்பினர்களுக்கிடையில் முத்தரப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இம் முத்தரப்பு உடன்படிக்கையின் கீழ் பாரிய பொறுப்புக்கள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அமைச்சானது இலங்கை அரசாங்கத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை ஒருங்கிணைத்தல், முகாமைசெய்தல், அவதானித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கான கருத்திட்ட முகாமைத்துவ பிரிவொன்றினை நிறுவியுள்ளது.

02. **நிரப்பப்பட வேண்டிய பதவி வெற்றிடம்**

| பதவி | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | 01/2019 சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் குழு |
|---|---|---|
| 01. கருத்திட்டச் செயலாளர் | 01 | PS-6 |

03. 01/2019 ஆம் இலக்க அரசாங்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவதற்கு பின்வரும் தகைமைகளில் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | பதவி | சம்பள குழு | தகைமை |
|---|---|---|---|
| 01 | கருத்திட்ட செயலாளர் | PS-6 | (கீழே 1 அல்லது 2)<br>01. ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழி உள்ளடங்கலாக மூன்று (3) திறமைச் சித்திகளுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்திபெற்று இருத்தல் அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து செயலக கற்கைநெறி அல்லது பட்டயச் செயலாளராக இருப்பதற்கான பரீட்சையினை தொடர்தல்<br>02. தொடர்புடைய துறையில் குறைந்தது 5 வருட அனுபவத்துடன் பட்டயச் செயலாளர் |

04. **பொது நிபந்தனைகள் :-**

விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 65 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல்.

05. **சம்பளம் :-**

2010.03.15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை மற்றும் ஏனைய தொடர்புடைய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும். அத்துடன் இதற்கு மேலதிகமாக உரித்துகள் சொல்லப்பட்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட படிகள் மற்றும் சிறப்புரிமைகளை உள்ளடக்கும்.

06. **விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள் :-**

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் 2:3:3 ஆம் பிரிவின் (ஆ) பந்திக்கமைவாக விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

07. **விண்ணப்பங்கள்:-**

தகைமைகள், அனுபவம் அத்துடன் ஏனைய தொடர்புடைய தகவல்கள் போன்ற விபரங்களை தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருக்குமாயின்) உள்ளடக்கி ஏ4 தாளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு 2020.11.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க / அரசு சாரா நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய திணைக்கள தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் நேரடியாக சமர்ப்பிக்கப்படுபவைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

செயலாளர்,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
17 ஆம் மாடி,
சுஹுருபாய, பத்தரமுல்ல.

# பட்டம் வென்று சாதனை படைத்த இளம் வீரர்

(சோபியா)



சோபியா ஓபன் டென்னிஸ் போட்டியில் இத்தாலி நாட்டின் ஜன்னிக் சின்னர் இளம் வயதில் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். சோபியா ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டி பல்கேரியாவில் இடம்பெற்றது.

இதில், இத்தாலி நாட்டின் ஜன்னிக் சின்னர் மற்றும் கனடா நாட்டின் வாசிக் பொஸ்பிசில் ஆகியோர் விளையாடினர்.

இதில், 6-4, 3-6, 7-6 (3) என்ற செட் கணக்கில் சின்னர் வெற்றி பெற்றார்.

இதனால் தனது 19 ஆவது வயதில் முதன் முறையாக ஏ.டி.பி.டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற இளம் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் கெய் நிஷி கோரி தனது 18 ஆவது வயதில் டெல்ரே பீச் ஓபன் போட்டியில் ஆடவர் பிரிவில் பட்டம் வென்று இளம் வீரர் என்ற சாதனைக்கு உரியவரானார். அதன்பின்னர் 12 ஆண்டு கள் கழித்து இந்த சாதனையை படைத்த இளம் வீரராக சின்னர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இந்திய வீரர்களுக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(கொழும்பு)

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணிவீரர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் எவருக்கும் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள், இருபது 20, டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ளது. அங்கு தனிமைப்படுத்தலிலுள்ள அவர்களுக்குக் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவில் அனைவருக்கும் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இந்திய அணி வீரர்கள் பயிற்சியை ஆரம்பித்தனர். (ஜ-4)

# கொரோனா சிகிச்சை நிலையங்கள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கொரோனாத் தொற்றாளர்களை சிகிச்சையளிப்பதற்கென கிழக்கு மாகாணத்தில் மேலும் நான்கு வைத்தியசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் 119 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.


பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் இந் நோயாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் வகையில் இவ்வாறு புதிதாக நான்கு கொரோனா சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# "குருகுலம்" தமிழ்மொழி மற்றும் சிங்களமொழி ஒளிபரப்பு அட்டவணை (2020.11.16-2020.11.22)

| | 16/11/2020 | 17/11/2020 | 18/11/2020 | 19/11/2020 | 20/11/2020 | 21/11/2020 | 22/11/2020 |
|---|---|---|---|---|---|---|---|
| TIME | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| 04 00 - 04 55 | தரம் 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (சி)-1 | தரம் 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த)-1 | தரம் 12 பொருளியல் (சி)-1 | தரம் 12 பொருளியல் (த)-1 | தரம் 12 புவியியல் (சி)-2 | தரம் 12 புவியியல் (த)-2 | தரம் 12 இணைந்த கணிதம் (சி)-2 |
| 04 55 -05 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 05 00 - 05 55 | தரம் 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (சி)-1 | தரம் 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த)-1 | தரம் 13 பொருளியல் (சி)-1 | தரம் 13 பொருளியல் (த)-1 | தரம் 13 புவியியல் (சி)-2 | தரம் 13 புவியியல் (த)-2 | தரம் 13 இணைந்த கணிதம் (சி)-2 |
| 05 55 - 06 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 06 00 -06 55 | தரம் 6 கணிதம் (சி)-1 | தரம் 6 கணிதம் (த)-1 | தரம் 6 விஞ்ஞானம் (சி)-1 | தரம் 6 விஞ்ஞானம் (த)-1 | தரம் 6 சிங்களம் -1 | தரம் 6 தமிழ் -1 | தரம் 6 வரலாறு (சி)-1 |
| 06 55 - 07 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 07 00 -07 55 | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ |
| 07 55 - 08 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 08 00 - 08 55 | தரம் 8 கணிதம் (சி)-1 | தரம் 8 கணிதம் (த)-1 | தரம் 8 விஞ்ஞானம் (சி)-1 | தரம் 8 விஞ்ஞானம் (த)-1 | தரம் 8 சிங்களம் -1 | தரம் 8 தமிழ் -1 | தரம் 8 வரலாறு (சி)-1 |
| 08 55 - 09.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 09 00 - 09 55 | தரம் 9 கணிதம் (சி)-1 | தரம் 9 கணிதம் (த)-1 | தரம் 9 விஞ்ஞானம் (சி)-1 | தரம் 9 விஞ்ஞானம் (த)-1 | தரம் 9 சிங்களம் -1 | தரம் 9 தமிழ் -1 | தரம் 9 வரலாறு (சி)-1 |
| 09 55 - 10 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 10 00 - 10 55 | தரம் 10 கணிதம் (சி)-1 | தரம் 10 கணிதம் (த)-1 | தரம் 10 விஞ்ஞானம் (சி)-2 | தரம் 10 கணிதம் (த)-2 | தரம் 10 விஞ்ஞானம் (சி)-1 | தரம் 10 விஞ்ஞானம் (த)-1 | தரம் 10 விஞ்ஞானம் (சி)-2 |
| 10 55 - 11 00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 11.00 - 11.55 | தரம் 11 கணிதம் (சி)-1 | தரம் 11 கணிதம் (த)-1 | தரம் 11 கணிதம் (சி)-2 | தரம் 11 கணிதம் (த)-2 | தரம் 11 கணிதம் (சி)-1 | தரம் 11 விஞ்ஞானம் (த)-1 | தரம் 11 விஞ்ஞானம் (சி)-2 |
| 11.55 - 12.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 12.00 - 12.55 | தரம் 12 புவியியல் (சி)-1 | தரம் 12 புவியியல் (த)-1 | தரம் 12 இணைந்த கணிதம் (சி)-1 | தரம் 12 இணைந்த கணிதம் (த)-1 | தரம் 12 பௌதிகவியல் (சி)-1 | தரம் 12 பௌதிகவியல் (த)-1 | தரம் 12 இரசாயனவியல் (சி)-1 |
| 12.55 - 13.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 13.00 - 13.55 | தரம் 13 புவியியல் (சி)-1 | தரம் 13 புவியியல் (த)-1 | தரம் 13 இணைந்த கணிதம் (சி)-1 | தரம் 13 இணைந்த கணிதம் (த)-1 | தரம் 13 பௌதிகவியல் (சி)-1 | தரம் 13 பௌதிகவியல் (த)-1 | தரம் 13 இரசாயனவியல் (சி)-1 |
| 13.55 - 14.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 14.00 - 14.55 | தரம் 7 கணிதம் (சி)-1 | தரம் 7 கணிதம் (த)-1 | தரம் 7 விஞ்ஞானம் (சி)-1 | தரம் 7 விஞ்ஞானம் (த)-1 | தரம் 7 சிங்களம் -1 | தரம் 7 தமிழ் -1 | தரம் 7 வரலாறு (சி)-1 |
| 14.55 - 15.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 15.00 - 15.55 | தரம் 3 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 3 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 3 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 3 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 13 பௌதிகவியல் (சி)-2 | தரம் 13 பௌதிகவியல் (த)-2 | தரம் 6/தரம் 7 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (சி)-1 |
| 15.55 - 16.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 16.00 - 16.55 | தரம் 4 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 4 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 4 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 4 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 13 விவசாயம் (சி)-1 | தரம் 13 விவசாயம் (த)-1 | தரம் 8/தரம் 9 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (சி)-1 |
| 16.55 - 17.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 17.00 - 17.55 | தரம் 5 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 5 தமிழ்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 5 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (சி)-1 | தரம் 5 கணிதம்/ சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (த)-1 | தரம் 13 இரசாயனவியல் (சி)-1 | தரம் 13 இரசாயனவியல் (த)-1 | தரம் 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (சி)-1 |
| 17.55 - 18.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 18.00 - 18.55 | தரம் 12 கணக்கியல் (சி)-1 | தரம் 12 கணக்கியல் (த)-1 | தரம் 12 அரசியல் விஞ்ஞானம் (சி)-1 | தரம் 12 அரசியல் விஞ்ஞானம் (த)-1 | தரம் 12 இரசாயனவியல் (சி)-1 | தரம் 12 இரசாயனவியல் (த)-1 | தரம் 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (சி)-1 |
| 19 00 - 22 00 | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ |
| 22 00 - 23 00 | தரம் 13 கணக்கியல் (சி)-1 | தரம் 13 கணக்கியல் (த)-1 | தரம் 13 அரசியல் விஞ்ஞானம் (சி)-1 | தரம் 13 அரசியல் விஞ்ஞானம் (த)-1 | தரம் 13 பொறியியல் தொழிநுட்பம் (சி)-1 | தரம் 13 பொறியியல் தொழிநுட்பம் (த)-1 | தரம் 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (சி)-2 |
| 21.30 - 21.55 | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ | அலைவரிசை ஐ |
| 21.55 - 22.00 | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு | பொழுதுபோக்கு |
| 23.00 - 24.00 | தரம் 12 பௌதிகவியல் (சி)-1 | தரம் 12 பௌதிகவியல் (த)-1 | தரம் 12 விவசாயம் (சி)-1 | தரம் 12 விவசாயம் (த)-1 | தரம் 12 பொறியியல் தொழிநுட்பம் (சி)-1 | தரம் 12 பொறியியல் தொழிநுட்பம் (த)-1 | தரம் 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (சி)-2 |

சிங்களமொழி ஒளிபரப்பு தமிழ்மொழி ஒளிபரப்பு

# இந்தியர்கள் 66 பேருக்கு கொரோனாத் தொற்று



(கொழும்பு)

இலங்கையின் தலைநகர் கொழும்பில் இயங்கும் கட்டுமானத் தளத்தில் பணியாற்றும் 66 இந்திய பிரஜைகளுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்கள் பேலியகொட மீன் சந்தை கொரோனாக் கொத்தணி தவிர பெருமளவில் தொற்றுக் குள்ளானநிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை தலைமை மருத்துவ அதி காரி டாக்டர் ருவான் விஜேமுனி தெரிவித்தார்.

அவர்கள் அனைவரும் தர்கா நகரில் உள்ள இடைக்கால சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களுக்கு பாரிய் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக, துறைசார்ந்தவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்திற்கு அத்தியாவசியபொருட்களுடன் வந்த மிகப்பெரிய கப்பலில் பொருட்களை இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக துறைமுக சேவைகள் ஊழியர்கள் தொழிலுக்கு செல்ல தாமதமாகியுள்ளது.

இதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக கப்பல்கள் அருகில் உள்ள துறைமுகங்களை நோக்கிச் சென்றுள்ளது.

அதனை இலங்கைக்கு மீண்டும் கொண்டு வர தாமதம் ஏற்படுவதுடன் மேலதிக செலவுகளையும் ஏற்க நேரிடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இதே நிலை நீடித்தால் அத்தியாவசியப் பொருட்களுக்கு இலங்கையில் பாரிய தட்டுப்பாடு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# "தலைவா" பாராளுமன்றில் ஒலித்த குரல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை 'தலைவா' என கூறியிருந்தார்.

இது பாராளுமன்ற வரலாற்றிலேயே முதல்முறை என தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் கொண்டு வந்திருந்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய ரஞ்சன் ராமநாயக்க, தனது உரையின் போது பல முறை சபாநாயகரை 'தலைவா'என விழித்திருந்தார்.

இது குறித்து சபாநாயகரோ, ஆளும் கட்சியினரோ கவனம் செலுத்தவில்லை என்பதால், அது சம்பந்தமாக எதிர்ப்புகள் ஏற்படவில்லை.

தன்னை 'தலைவா' என அழைத்ததில் சபாநாயகருக்கும் விருப்பம் இருந்தமை அவரது செயற்பாடுகளின் மூலம் காண முடிந்தது என அந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற அவையில் இருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# நிஷாந்த சில்வா வெளிநாடு செல்வதை அதிகாரிகள் பலர் அறிந்திருந்தனர்

(கொழும்பு)

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தனது மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றை முன் கூட்டியே ஒப்படைத்து விட்டு வெளிநாடு செல்ல உள்ளதை திணைக்களத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் அனைவரும் அறிந்திருந்ததாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளது.



அவரும், அவரது குடும்பத்தினரும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற போது அங்கிருந்த குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் அவர்கள் விமானத்தில் ஏற இடமளித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியின்றி நிஷாந்த சில்வா வெளிநாடு சென்றுள்ளதுடன் அவர் சுவிட்ஸர்லாந்து செல்லவிருந்ததை இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அறிந்திருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதனிடையே நிஷாந்த சில்வாவை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள கோரிக்கைக்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் இதுவரை பதிலளிக்கவில்லை.

நிஷாந்த சில்வாவை நாடு கடத்த வேண்டாம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை, றக்பி வீரர் வசீம் தாஜுடின் கொலை, 11 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னேலிகொட கடத்திச் செல்லப்பட்டமை உட்பட 2015 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்த முக்கிய குற்றச் செயல்கள் குறித்த விசாரணைகளை நடத்தி வந்த அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பசில் நாட்டிற்கு தேவை

## ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் விருப்பம்

(கொழும்பு)

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, தான் உட்பட அனைவரும் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருப்பதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லங்சா தெரிவித்தார்.

வென்னப்புவ பிரதேசத் தில் நேற்று முன்தினம் நடை பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ நாட்டிற்கு தேவையான தலைவர் என்பதை பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அவரிடம் உள்ள அனுபவம், அறிவு, செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உள்ள தொடர்புகளை பயன்படுத்தி பொருளாதாரம், மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# புதிய அரசியல் வரைபு முன்மொழிவு காலம் நீடிப்பு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கான பொதுமக்கள் முன்மொழிவுக்காக கால எல்லையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பினை வரைவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட நிபுணர்கள் குழுவொன்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவினால் வரைவொன்று தயாரிக்கப்படுவதற்காக பொதுமக்களின் முன்மொழிவுகளைச் செய்வதற்கு இம்மாதம் 30 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கால சூழல்களுக்கு அமைவாக, இக் காலப்பகுதியை மேலும் நீடிப்பதற்கு நடவடிக்கைகள்எடுக்கப்படவுள்ளன.

அதன்படிஎதிர்வரும் டிசெம்பர் மாத இறுதி வரையில் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை அதிகரிப்பதற்கே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் அவர் கூறினார்.

புதிய அரசியலமைப்பு வரைவினை தயாரிப்பதற்காக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடத்திலிருந்து அரசின் தன்மை, அடிப்படை உரிமைகள், மொழி, அரச கொள்கைகள், நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, வாக்களிப்புத்தத்துவம் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பு, அதிகாரத்தினை பன்முகப்படுத்தல், நீதித்துறை, பகிரங்க நிதி, பொது மக்கள் பாதுகாப்பு உட்பட அக்கறை செலுத்தப்பட வேண்டிய பிற வியங்கள் தொடர்பில் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இந்தியாவில் 82 இலட்சத்தை கடந்த குணமடைந்தோர் எண்ணிக்கை

(டில்லி)

இந்தியாவில் கொரோனாவிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 82 இலட்சத்தை கடந்துள்ளது. அந்தவகையில் 82 இலட்சத்து 5 ஆயிரத்து 728 பேர் குணமடைந்துள்ளனர்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, இந்தியாவில் மேலும் 41 ஆயிரத்து 100 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 88 இலட்சத்து 14 ஆயிரத்து 902 ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 447 பேர் உயிரிழந்ததை தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 42 ஆயிரத்து 156 பேர் வீடு திரும்பினர். இதனால் கொரோனாவில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 82 இலட்சத்து 5 ஆயிரத்து 728 ஆக அதிகரித்துள்ளது என அறிக்கையில் கூறப்பட்டு ள்ளது. (ஜ-4)

# பூஸாவில் 44 கைதிகளுக்கு தொற்று

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் மேலும் 44 கைதிகள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதிகளிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.சோதனையில் அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

அதன்படி சிறைகளில் பதிவான கொரோனாத் தொற்று எண்ணிக்கை 329 ஆக உயர்ந்துள்ளது. (ஜ-4)

# ஜனாஸா விடயத்தில் ஜனாதிபதியிடம் ஆட்சேபனையில்லை

**(கொழும்பு)**

**கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்தவிதமான ஆட்சேபனைகளும் இல்லை என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.**

கொரானா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க விடயத்தில் சுகாதார தொழில்நுட்பக்குழுவிடத்திலேயே இறுதி முடிவு தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பாக இன்னமும் இறுதி முடிவொன்று எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் முஸ்லிம்களின் பண்பாட்டு ரீதியான மற்றும் இஸ்லாமிய மத முறைப்படி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கும் இடமளிக்க வேண்டும் என்றும் நாம் தொடர்ச்சியாக ஜனாதிபதி பிரதமர் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்திருந்தோம்.

அதனடிப்படையில் அமைச்சரவையிலும் இந்த விடயம் சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட்டது. அமைச்சரவையில் ஜனாஸாக்களின் நல்லடக்கம் தொடர்பில் முஸ்லிம் மக்கள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் காணப்படுகின்ற முன்னுதாரணங்கள் உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த விடயத்தினை கையாள்வதற்காக சுகாதார தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. அந்தக்குழுவிடத்திலும் உரிய தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் ஜனாஸாக்களை புதைப்பதன் காரணமாக தொற்றுக்கள் பரவலாம் என்று அச்சம் வெளியிடப்படுகின்றது. அத்துடன் நிலத்தடி நீர்



மாசு பற்றியும் கவனம் செலுத்தப்படுகின்றன.

இந்த விடயத்தில் ஜனாதிபதியுடன் நான் பலதடவைகள் கலந்துரையாடியுள்ளேன். அவர் பக்கத்தில் எவ்விதமான ஆட்சேபனைகளும் இல்லை. அவ்வாறு இருக்கையில் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.


குறிப்பாக முஸ்லிம் மக்களின் கலாசார பண்பாட்டு விடயங்களுக்கு எதிரானவராக சித்தரிக்கப்படுகின்றார். அது முற்றிலும் தவறானதொரு பார்வையாகும் ஜனாதிபதியின் மீது அரசியல் காரணங்களுக்காகவே குற்றசாட்டுக்களும் பொய்யான பிரசாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# அபிவிருத்தி இலக்குகளை அடைய ஆராய்வுக் குழு நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தடையாக இருக்கும் பன்முக சவால்களை சமாளிப்பதற்கு, நிதியுதவியின் அவசியத்தை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

கயானா கூட்டுறவுக் குடியரசின் வெளி விவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சரின் தலைமையில் வெளிவிவகார அமைச்சர்களின் நாற்பத்து நான்காவது வருடாந்தக் கூட்டம் காணொளி மூலம் இடம்பெற்ற போதே வெளிவிவகார



அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தடையாக இருக்கும் பன்முக சவால்களை சமாளிப்பதற்கு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவுவது குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் இலங்கை மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கிய வலுவான அதிகாரம், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உத்வேகத்தைப் பெற்றுத் தருவதாகவும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக, குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அது நாட்டின் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரில் ஒரு  பெரிய ஞானி இருந்தார். மிக வயதாகிவிட்டது. கடைசி காலத்திலே அவரிடம் சில பேர் வந்தார்கள்.உங்கள் குரு யார்? என்று கேட்டார்கள். அவர் நிமிர்ந்து பார்த்தார். எனக்கு ஆயிரக் கணக்கான குருமார்கள் உண்டு. அவர்கள் பேரை எல்லாம் நான் சொல்ல வேண்டும் என்றால் காலம் போதாது.ஆனால் முக்கியமான மூன்று பேரைப் பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கின்றேன்.. என்றார். அந்த மூன்று பேரிலே ஒருத்தன் ஒரு திருடன். ஒரு சமயம் ஒரு பாலைவனம் வழியாக நான் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது வழி தவறிப் போய் ஒரு கிராமத்திற்குப் போய்விட்டான்.

அது இருட்டு நேரம்.நடு இராத்திரி ஊரே உறங்கிப் போய் விட்டது. அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டு சுவற்றில் ஏதோ செய்து உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தான். அவனிடம் போய் நான் இன்றைக்கு இங்கே எங்கே தங்க முடியும்? என்று கேட்டேன். அதற்கு அவன் இந்த இராத்திரி வேளையில் அது மிகவும் சிரமம். ஒரு திருடனுடன் உங்களால் தங்க முடியும்.என்றால் நீங்கள்.. என்னுடன் தங்கலாம் என்றார்.நான் அவனுடன் ஒரு மாதம் தங்கியிருந்தேன்.. ஒவ்வொரு நாள் ராத்திரியும் இப்பொழுது நான் என்னுடைய வேலைக்குப் போகின்றேன்.நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போவான்.

அவன் திரும்பி வந்தவுடன் உனக்கு ஏதாவது கிடைத்ததா? என்று கேட்பேன்.அதற்கு அவன்... இன்றைக்கு இராத்திரி ஒன்றுமில்லை நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்.அப்படி என்பான். ஒரு போதும் அவன் நம்பிக்கை இழந்ததே கிடையாது எப்பொழுதும் சந்தோசமாகவே இருந்தான்.நானும் பல காலமாக தியானம் செய்து கொண்டே இருந்தேன். ஒன்றுமே நடக்கவில்லை..ஆனால் நான் என்ன செய்தேன்.தெரியுமோ? மனது வருத்தப்படும்..நம்பிக்கை இழந்துவிடுவேன். அப்பொழுதெல்லாம்.அந்தத் திருடனுடைய விடா முயற்சி தான் ஞாபகத்திற்கு வரும்.என்னுடைய இரண்டாவது குரு ஒரு நாய்.ஒரு சமயம்..எனக்கு மிகவும் தாகம். இருந்தது.ஒரு நதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.அப்பொழுது ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகம் ஓடி வந்து ஆற்றைப் பார்த்து அதோடு நிழல் ஆற்றிலே தெரிந்தது.அதைப் பார்த்து பயந்துவிட்டது. அதாவது அது தன் சொந்த உருவத்தையே கண்டு பயந்தது.அதைப் பார்த்துக் குரைத்தது. திரும்பி ஓடியது.ஆனாலும் அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததனால் அது மறுபடியும் திரும்பி வந்தது. இப்படி சில தடவை செய்தது. இருந்தாலும்.. கடைசியில் தண்ணீரிலே குதித்தது.

இப்படி குதித்தவுடன் அதனுடைய உருவமும் மறைந்துவிட்டது. இதைப் பார்த்தேன். நான் என்ன புரிந்து கொண்டேன்.. என்றால்.. எவ்வளவு தான் பயம் இருந்தால் கூட ஒருத்தன் தைரியமாக காரியத்திலே இறங்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன்.இந்த போதனை அந்த நாயிடமிருந்து எனக்குக் கிடைத்தது.என்னுடைய மூன்றாவது குரு யார் என்றால் அது ஒரு சின்னக் குழந்தை..

நான் ஒரு சமயம் ஒரு நகரத்திற்குப் போனேன். அங்கே ஒரு குழந்தை எரிகின்ற மெழுகு வர்த்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது. நான் அந்தக் குழந்தையைப் பார்த்து வேடிக்கையாக கேட்டேன்.ஏன் பாப்பா... இந்த மெழுகுவர்த்தியை நீயாகவே கொளுத்தினாயா? என்று கேட்டேன்.ஆமாம்  என்றது அந்தக் குழந்தை.சரி... இந்த மெழுகுவர்த்தி முன்னால் எரியாமல் இருந்தது...இப்பொழுது எரிகின்றது..இந்த மெழுகுவர்த்திக்கு முடியுமா? என்று கேட்டேன்.

இதற்கு அந்தக் குழந்தை சிரித்துவிட்டு...அந்த மெழுகுவர்த்தியை ஊதி அணைத்துவிட்டது. அதன்பின்பு என்னைப் பார்த்துக் கேட்டது.

இப்பொழுது இந்த மெழுகுவர்த்தியின் வெளிச்சம் போனதப் பார்த்தீர்களா? அது எங்கே போய்விட்டது என்று சொல்லுங்கள் என்றது. அந்தக் குழந்தை. இப்படிக் கேட்டதும் என்னிடம் இருந்த ஆணவம் அழிந்தது.நாம் படித்தது எல்லாம் அந்த விநாடியிலே சுக்கு நூறாகிவிட்டது. எனது முட்டாள் தனத்தை நான் உணர்ந்தேன்.அப்படி என்று இவ்வளவும் அந்த ஞானி விவரமாகச் சொன்னாராம் அதனாலே நாங்கள். இன்னாரிடம் இருந்து தான் இதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றது இல்லை. யாரிடமிருந்து எதையும் கற்றுக் கொள்ளலாம்.நம்முடைய ஆள் ஒருத்தன் ஒரு நாய் வளர்த்துக் கொண்டிருந்தான் அந்த நாய்க்கு வாள் கிடையாது. யாரோ ஏற்கனவே வெட்டி எடுத்துவிட்டார்கள். இந்த நாய் தான் குரு சேர் அதுவிடமிருந்து நான் பாடம் கற்றிருக்கின்றேன் என்றான். அப்படி என்ன கற்றுக் கொண்டாய் அந்த வாளில்லாத நாயிடமிருந்து என்று கேட்டேன். நாம் யாரிடமும் வாலாட்டக் கூடாது என்ற பாடத்தை அதனிடம் இருந்து தான் கற்றுக்கொண்டேன் என்றான்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

19

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஜனநாயகக்கட்சியைப் பொறுத்த மட்டில் இந்த விதிமுறையே அனைத்து மாநிலங்களிலும் கடைப்பிடிக்கப்படு கிறது. வெற்றிபெறுபவர் அனைத்தை யும் அடைவர் **(winner takes all)** என்ற விதிமுறை பின்பற்றப்படுவ தில்லை.

மேலும், இக் கட்சியில் மேல்மட்ட பேராளர்கள் **(super delegates)** என்று ஒரு பிரிவு இருக்கிறது. இவர் கள் குடியரசுக்கட்சி மாதிரியே தங்க ளுக்குப் பிடித்த வேட்பாளருக்கு ஆதரவு தரலாம். மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த ஆளுநர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள், கட்சித் தலைவர்கள், கட்சிச் செயற்குழு உறுப் பினர்கள் ஆகியோர் இதில் இடம் பெறு கிறார்கள்.

ஜனநாயகக் கட்சியை பொறுத்த மட்டில் 2020 ஆம் ஆண்டில் மொத் தம் 4750 பேராளர்களில் 771 மேல் மட்ட பேராளர்கள், மற்றவர்கள் உறுதி யளிக்கப்பட்ட பேராளர்கள் ஆவர். ஜனநாயகக் கட்சியின் வேட்புமனுவை வெல்ல, ஒரு வேட்பாளர் மாநாட்டின் முதல் வாக்குப்பதிவில் உறுதியளிக் கப்பட்ட பேராளர்களில் பெரும்பான்மை யினரின் (1,991) ஆதரவைப் பெற வேண்டும். முன்னிலை வேட்பாளர் பெரும்பான்மையை வெல்லத் தவறும் கட்டத்தில், அனைத்து 4,750 பேராளர் களும் அடுத்தடுத்த வாக்குச்சீட்டில் வாக்களிக்க முடியும்.

ஜோ பிடன் முதல் வாக்குப்பதிவில் 2687 பேராளர் களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்வு பெற்றுவிட்டார். கட்சியின் தேசிய மாநாட்டில் 4714 பேராளர்களில் 3558 பேராளர்களின் ஆதரவை ஜோ பிடன் பெற்றிருந்தார்.

ஆரம்பத்தில் ஜோ பிடன் விட மேலும் 15க்கு மேற்பட்டவர்கள் ஜன நாயகக் கட்சியின் வேட்புமனுவை வெல்ல போட்டியிட்டிருந்தனர். அவர்க ளில் 15பேர் 5 அல்லது 5க்கு மேற்பட்ட ஜனநாயகக் கட்சியின் முதன்நிலை வாக்கெடுப்பில் போட்டியிட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் பின்னர் வாபஸ் பெற்றுவிட்டனர்.

### ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி நியமன மாநாடு

ஜனநாயக தேசியக் குழு **(D.N.C)** அதன் ஜனாதிபதி நியமன மாநாட்டை ஒகஸ்ட் 17, 2020 வாரத்தில் நியூ யோர்க் நகரம், லொஸ் ஏஞ்சல்ஸ், மில்வாக்கி மற்றும் வில்மிங்டனில் நான்கு நிலைகளில் நடத்தியது. இந்த மாநாடு முதலில் ஜூலை 13-16, 2020 அன்று மில்வாக்கியில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக அமைப்பாளர்கள் நிகழ்வை ஒத்தி வைத்தனர். மாநாட்டின் பெரும்பாலான நிகழ்வுகள் நேரடித் தொடர்பற்ற **(Remote)** முறையில் நடந்தன. மாநாட் டில் கலந்து கொள்வதற்காக பிரதிநிதிகள் மில்வாக்கிக்கு பயணிக்கத் திட்டமிடக் கூடாது என்று ஜனநாயக தேசிய மாநாட் டுக் குழு ஜூன் 2020 இல் அறிவித்தது.

அதற்கு பதிலாக, விதிகள், தளம் மற்றும் நற்சான்றிதழ் குழுக்களின் அறிக்கைகள் மீதான வாக்குகள் 2020 ஒகஸ்ட் 3 முதல்-15 வரை நேரடித் தொடர்பற்ற **(Remote)** முறையில் நடந்தன. முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் பிற பேச்சாளர்கள் மில்வாக்கிக்கு பயணிக்க மாட்டார்கள் என்று ஜனநாயக தேசிய மாநாட்டுக் குழு 2020 ஒகஸ்ட் 5 அன்று அறிவித்தது.

ஜனநாயக கட்சியின் வேட்பாளரை அதிகாரபூர்வமாக தேர்வு செய்யும் கட்சி மாநாடு வெர்ச்சுவல் **(virtual)** எனப்ப டும் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டது. மாநாட்டின் முடிவில் அமெரிக்க தேர்த லுக்கான ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட ஒகஸ்ட் 18, 2020 அன்று ஜோ பிடனை, ஜனநாயகக் கட்சி அதிகார பூர்வமாக அறிவித்தது. தலைவர்களின் முக்கிய உரைகள் அவர்கள் இருந்த இடத்தில் இருந்தே காணொளிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டன. முன்கூட்டியே இந்த உரைகள் பதிவு செய்யப்பட்டன. மாநாட் டில் துணை ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் அதிகாரபூர்வமாக அறிவிக் கப்பட்டார்.

### குடியரசுக் கட்சி தேசிய மாநாடு

குடியரசுக் கட்சி தனது தேசிய மாநா ட்டை வட கரோலினாவின் சார்லோட்டில் குறிப்பிட்ட அளவு நபர்களுடன் 2020 ஆகஸ்ட் 24-27 வரை நடத்தியது. தேசிய மாநாட்டிற்கு முன்னர், மாநாட்டு பேராளர்களை தேர்ந்தெடுக்க மாநில கட்சிக் குழுக்கூட்டங்களும் முதன்நிலை வாக்கெடுப்புக்களும் நடத்தப்பட்டன. இதில் வெற்றிபெற்ற பேராளர்கள் கட்சி யின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுக்க வாக்க ளிக்கின்றனர். 2020 மார்ச் 17 அன்று வேட்புமனுவை வெல்ல தேவையான 1276 பேராளர்களின் வரம்பை ட்ரம்ப் கடந்தார். ட்ரம்ப் முறைப்படி வெள்ளை மாளிகையில் இருந்து கட்சியின் ஜனா திபதி வேட்பாளர் பரிந்துரையை ஏற்றுக் கொண்டார்.

இந்த மாநாடு முதலில் சார்லோட்டில் நடைபெற திட்டமிடப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் தொற்று காரண மாக மாநிலம் தழுவிய கட்டுப்பாடுகள் மாநாட்டினை ஜாக்சன்வில்லுக்கு இட மாற்றம் செய்ய வழிவகுத்ததோடு மாநா ட்டில் கலந்து கொள்ளும் பேராளரின் எண்ணிக்கையை 2500 இலிருந்து 336 ஆகக் குறைத்துக்கொண்டது. மேடைக்குழு கூட்டம் நடைபெறவில்லை.

### சூடு பிடித்தது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம்

வேட்பாளர்கள் ட்ரம்ப் - ஜோ பிடன் நேருக்குநேர் முதலாவது விவாதம் 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ந் திகதி ஒஹியோ மாநிலத்திலுள்ள கிளீவ்லாண்டில் நடைபெற்றது.

அப்போது பேசிய ஜனாதிபதி ட்ரம்ப், உச்சநீதிமன்ற நீதிபதியாக எமிபேரட்டை பரிந்துரை செய்ய தனக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்றார். மக்களுக்கு சிறந்த மருத்துவ காப்பீடு தர தான் நினைப்ப தாகவும், 47 வருடங்களில் செய்யா ததை 47 மாதத்தில் செய்து விட்டேன் என்றும் ட்ரம்ப் பெருமிதம் தெரிவித்தார். சில வாரங்களில் கொரோனா தடுப்பு மருந்து வர வாய்ப்பு உள்ளது என்றும் ட்ரம்ப் கூறினார்.

அப்போது பேசிய ஜோ பிடன், தேர்தல் பணி ஆரம்பித்த பின் நீதிபதிகளை நியமிப்பதா எனக் கேள்வி எழுப்பினார். பொருளாதாரத்தை எந்த அளவுக்கு சிதைக்க முடியுமோ? அந்த அளவுக்கு ட்ரம்ப் சிதைத்து விட்டார் என்ற ஜோ பிடன், தடுப்பூசி பற்றி ட்ரம்புக்கு எதுவும் தெரியாது என்றார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் களின் போது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏன் பெரிய பேரணிகளை நடத்தி னார் என்று அவரிடம் கேட்கப்பட்டதற்கு, ட்ரம்ப், தான் சொல்வதை மக்கள் கேட்க விரும்புவதால் என்று கூட்டத்தைப் பற்றி பெருமையாகக் கூறினார்.

ஜோ பிடன் ட்ரம்பைத் தாக்கி பேசி னார் அவரை "முற்றிலும் பொறுப்பற்ற வர்" என்று அழைத்ததோடு, ஜனாதிப தியை தனது ஆதரவாளர்களிடையே நோய் பரப்புவதில் அக்கறை இல்லை, அங்குள்ள மக்கள் சுவாசிப்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை என கூறி னார். ஜோ பிடன் ட்ரம்பை ஒரு "கோமாளி" என்று அழைத்தார். "இந்த கோமாளியிடம் இருந்து எந்த வார்த் தையையும் பெறுவது கடினம் - இந்த நபரை மன்னியுங்கள்" என்று ஜோ பிடன் கூறினார்.

ஜோ பைடனை ஊக்க மருந்து சோதனைக்குட்படுத்த வேண்டும் என டிரம்ப் கூறிய நிலையில், ட்ரம்ப் வரு மான வரி கணக்கு செலுத்துவது இல்லை என ஜோ பிடன் குற்றம் சாட்டினார். சில சமயங்களில் தொகுப் பாளர் கிறிஸ் வோலஸ் கொள்கைப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த முயன்றபோது அதை முன்னாள் உப ஜனாதிபதி ஜோ பிடன் மீதான தனிநபர் தாக்குதல்களாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாற்றியிருந்தார்.

சீனாவுடன் முன்னாள் உப ஜனா திபதி ஜோ பிடனின் மகன் ஹன்டர் பிடனின் வர்த்தக ஒத்துழைப்புகளை குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ வின் மேயரின் மனைவியிடமிருந்து அவர் நிதியைப் பெற்றதாகவும் குறிப் பிட்டிருந்தார்.

இதனை அடுத்து ஒக்டோபர் பதி னைந்தாம் திகதி புளோரிடா மாகா ணம் மியாமியிலும், ஒக்டோபர் 22ஆம் தேதி மாகாணம் மாஸ்வில்லிலும் மேலும் இரு விவாதங்கள் நடத்து கிறார்கள். அமெரிக்க தேர்தல் வரலாற் றில் ஜனாதிபதி வேட்பாளர்கள் இரு வரும் நேரடியாக விவாதிப்பது என்பது தொட ர்ந்து கடைப்பிடிக்கப்படும் நடை முறையாக இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.

### 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி வந்த அதிர்ச்சி செய்தி

ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி வந்த பின்வரும் செய்தி அமெரிக்க மக்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

"ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ஆகியோருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோ தனை முடிவுகள் வருவதற்கு முன்பா கவே தனது நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்த ட்ரம்ப், தானும் தனிமைப் படுத்திக் கொள்ளப் போவதாக கூறி யிருந்தார். இந்நிலையில் ட்ரம்ப் மற்றும் மெலனியா ட்ரம்ப் ஆகியோ ரின் கொரோனா பரிசோதனை முடிவு கள் வெளிவந்தன. அதில், இருவரு க்கும் பொசிட்டிவ் என வந்துள்ளது. இத்தகவலை டுவிட்டரில் பதிவிட்டு ள்ளார் ட்ரம்ப். அத்துடன், உடனடியாக தனிமைப்படுத்தும் நடைமுறை மற் றும் சிகிச்சையை தொடங்க உள்ள தாகவும் கூறி உள்ளார்."

இதனால் ஒக்டோபர் பதினைந்தாம் திகதி புளோரிடா மாகாணம் மியாமி யிலும், ஒக்டோபர் 22ஆம் திகதி மாகாணம் மாஸ்வில்லிலும் நடை பெற இருக்கும் இரு விவாதங்கள் நடைபெறுமா என்பது சந்தேகமே.

அதுமட்டுமல்ல அமெரிக்க ஜனாதி பதி ஒருவர் கடும் சுகவீனம் உற்றால் அல்லது சத்திரச் சிகிச்சைக்கு உட்படும் யார் ஜனாதிபதியாக இருப்பார் என்ற வாதமும் மக்கள் மத்தியில் தோன்றி யுள்ளது. அதாவது ட்ரம்ப் சுகவீன முற்றால் தற்போது உள்ள ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்பது யார்? என்ற பிரச்சினை இப்போது தோன்றி யுள்ளது.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இயலாது போனால் உதாரணமாக கொவிட்-19இற்கான சிகிச்சைகளுக்குள்ளாகும் போது தனக்கு முந்தைய இரண்டு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதிகள் போல அதிகா ரத்தை தனது உப ஜனாதிபதி மைக் பென்ஸிடம் கையளிக்க முடியும்.

(தொடரும்...)

# தொல்பொருள் உரிமங்களுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

**பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் காரணமாக தொல்பொருள் உரிமங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக புதிய அறிக்கையொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.**

இலங்கை தொல்பொருள் உரிமங்களை முகாமைத்துவம் செய்தல் என்ற பெயரில் கணக்காய்வாளர் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.


நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் தொடர்பிலான தரவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லையென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தொல்பொருள் கொள்கை வெளியிடப்பட்டு 10 வருடங்கள் ஆகின்ற போதிலும், அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தொல்பொருள் திணைக்களம் கவனம் செலுத்தவில்லையென இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த தேசிய கொள்கை தற்போதைய நிலைக்கு ஏற்ப புதுப்பிக்கப்படவில்லையெனவும் தொல்பொருள் உரிமங்கள், அழிவடைவதற்கு சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளும் போதிய மனித வளம் மற்றும் ஏனைய வளங்களில் காணப்படும் குறைபாடுகளுமே காரணம் எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



### பிரணவமாக இருக்கும் விநாயகர்

(தொடர்ச்சி)

இதனால் உடம்பில் உள் எழுச்சி ஏற்படும். நம் மனம் தியானம் செய்வதற்கு ஏற்ற ஒரு பக்குவம் உண்டாகும். எனவே விநாயகர் முன்பு எத்தனை தடவை வேண்டுமானாலும் தோப்புக்கரணம் போடலாம். 3, 5, 7, 9, 12, 15, 21, 36 என்ற கணக்கில் பக்தர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு தோப்புக்கரணம் போடலாம்.

இதையடுத்து விநாயகர் அமைக்கப்பட்டுள்ள இடம் சந்நிதி அமைப்பில் இருந்தால் ஒரே ஒரு தடவை மட்டும் சுற்றி வந்து வழிபடலாம். விநாயகர் என்றால் தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் என்று பொருள். கணபதி என்ற சொல்லில் "க" என்ற எழுத்து ஞானத்தைக் குறிக்கிறது. "ண" என்ற எழுத்து மோட்சத்தை குறிக்கிறது. பதி என்பது தலைவன் என்பதை குறிக்கிறது.

இதன்மூலம் ஞானத்துக்கும் மோட்சத்துக்கும் விநாயகரே தலைவர் என்பது புரியும். அவரை சரண் அடைய துன்பங்கள் குறையும். விநாயகர் உருவம் வித்தியாசமானது. விசித்திரமானது. யானைத் தலை, பானை வயிறு, பெருச்சாளி வாகனம், 5 கரங்கள் என்று அவர் உருவம் பக்தர்கள் மனதில் ஆழமாக பதிந்து விட்டது.

விநாயகரின் இந்த உருவ வித்தியாசங்களின் பின்னணியில் வெவ்வேறு தத்துவங்களும் புராண சம்பவங்களும் நிறைந்துள்ளன.

இத்தகைய விநாயகர் வித்தியாசம் போலவே அவருக்கான மலர்கள், நைவேத்தியங்கள், வேண்டுதல்களில் கூட வித்தியாசம் உள்ளது. சுண்டல், பொரி, கடலை, இளநீர், தேன், அப்பம், அதிரசம், முறுக்கு, சர்க்கரை, பொங்கல், கரும்பு, விளாம்பழம், கொழுக்கட்டை, மிளகு அன்னம், வடை போன்றவை விநாயகருக்கு பிடித்த நைவேத்தியங்களாகும். மலர்களில் செம்பருத்தி, ரோஜா, தும்பை, மந்தாரை ஆகியவை விநாயகருக்கு மிகவும் உகந்தவை. விநாயகரை எருக்கம் இலையால் அர்ச்சனை செய்தால் குழந்தைப்பேறு உண்டாகும். அரச இலை அர்ச்சனை எதிரியை வீழ்த்தும். வெள்ளெருக்கு அர்ச்சனை சகல சௌபாக்கியம் தரும். வில்வ இலை அர்ச்சனை இன்பத்தைப் பெருகச் செய்யும்.

இப்படி வழிபாடுகள் செய்து முடித்த பிறகு...

**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை**
**நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை**
**புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.**

போன்ற துதிப்பாடல்களை பாடி விநாயகர் வழிபாட்டை நிறைவு செய்யலாம்.

அதன்பிறகு கருவறை நோக்கிச் செல்ல வேண்டும். கர்ப்பக்கிரக வாசலில் இருபக்கமும் துவார பாலகர்கள் ஒரு விரலை உயர்த்திக்காட்டியபடி நிற்பதைப் பார்க்கலாம். இவை காவல் தெய்வங்கள்.

சங்க காலத்துக்கு முன்பு இருந்த அரண்மனை வாயில்களில் இருபுறமும் வீரர்களைக் காவலுக்கு நிறுத்தும் பழக்கம் இருந்தது. அந்தக் கலாசாரத்தை அடியொற்றியே துவாரபாலகர்கள் ஏற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் அருகில் சென்று "அடியேன் இறைவனை வணங்க அனுமதி தாருங்கள்" என்று வேண்டிக் கொள்ள வேண்டும். "இறைவன் ஒருவனே" என்ற தத்துவத்தை தம் ஒரு விரல் உயர்த்திக்காட்டும் துவாரபாலகர்களை மனம் உருகி வழிபட வேண்டும். தெரிந்தவர்கள் தோத்திரப் பாடல்களைப் பாடலாம்.

அதன்பிறகு மூலஸ்தானத்துக்குள் நுழைய வேண்டும். ஆலயத்தின் முக்கியமான பகுதி மூலஸ்தானம்தான். அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அடுத்ததாகப் பார்க்கலாம்.(முற்றும்)

# செய்தித்துளிகள்

## சில பகுதிகளில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சில பகுதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி முதல் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகல், களுத்துறை, கேகாலை மாவட்டங்களின் 7 பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் நகராட்சி மன்ற பகுதி, குளியாப்பிடிய பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பொலிஸ் பிரிவு, இங்கிரிய பொலிஸ் பிரிவு, வேகட மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்ப ட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல பொலிஸ் பிரிவு, மாவனெல்ல பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளிலும் தனிமைப் படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.ஏனைய தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் அவ்வாறே தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## 2021 ஆம் ஆண்டில் எத்தனை விடுமுறைகள்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான அரச விடுமுறை தினம் அடங்கிய அட்டவணையை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

2021 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை 25 அரச விடுமுறைகள் பட்டியலிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களிலேயே அதிகளவிலான விடுமுறைகள் காணப்படுகின்றன.

குறித்த இரண்டு மாதங்களிலும் தலா 4 விடுமுறைகள் வீதம் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 160 | 140 |
| தக்காளி | 120 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 60 |
| கோவா | 80 | 50 | 100 | 120 |
| கரட் | 130 | 200 | 200 | 220 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 220-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 160 | 180 |
| பாகற்காய் | 300 | 280 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 240 |
| லீக்ஸ் | 60 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 180 | 200 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 40 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | — | 220 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | — |
| முள்ளங்கி | 50 | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 100 |



# சிறுவர் அரங்கம்

## ஓநாயும் ஆட்டுக் குட்டியும்

ஒருநாள் ஓநாய் ஒன்று அதிகமான தாகத்துடனும், பசியுடனும் தவித்துக்கொண்டு இருந்தது. அதனால் அது தண்ணீர் குடிக்க ஒரு ஓடைக்குச் சென்றது.

சிறிது தூரத்தில் ஒரு ஆட்டுக்குட்டி தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அதனை கண்டு ஓநாய்க்கு கோபம் வந்தது.

அது ஆட்டுக் குட்டியைப் பார்த்து டேய் முட்டாள்! நான் தண்ணீர் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கவில்லையா. ஓடையைக் கலக்குகிறாயே என்றது.

ஆட்டுக்குட்டி மிகுந்த பயத்துடன் நான் உங்களுக்குக் கீழ்ப் பாகத்தில் உள்ள தண்ணீரைக் குடிக்கிறேன். நீங்களோ மேல் பாகத்தில் உள்ள தண்ணீரைக் குடிக்கிறீர்கள்.


அப்படியிருக்க தண்ணீர் எப்படி கலங்கும் என்றது.

ஆறு மாதத்திற்கு முன்னால் உன் தந்தை இப்படித் தான் என்னிடம் வாயாடினார். வாயாடியதற்காக அவருடைய தோல் அன்று உரிக்கப்பட்டது.

அது போல் உன் தோலையும் உரித்தால் தான் நீ வாயாடுவதை நிறுத்துவாய் என்று கோபமாகச் சொல்லியது ஓநாய். ஆட்டுக் குட்டியோ மிகவும் பயந்தது.

ஐயா! நான் சொல்வதை நம்புங்கள். நான் பிறந்து இன்னும் ஆறு மாதம் கூட ஆகவில்லை என்று மிகப் பணிவாகச் சொல்லியது.

ஓநாய் கோபமாகப் பற்களைக் கடித்துக் கொண்டு எங்கள் இனத்தாரிடம் விரோதம் காட்டுவதே உங்கள் இனத்தாருக்கு வழக்கமாகி விட்டது.



இப்போது நீ உன் முன்னோர்கள் செய்த கொடுமைகளுக்கு எல்லாம் சேர்த்து தண்டனை அடைந்தே தீர வேண்டும் என்று சொல்லிக் கொண்டே ஆட்டுக் குட்டியின் மீது பாய்ந்து ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்றது ஓநாய்.


**நீதி :**

**கெட்டவர்கள் ஒருபோதும் இரக்கப்பட மாட்டார்கள்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்

**26**



சொல்லிவிட்டு அலெக்சாண்டரின் முதுகைத் தட்டிக்கொடுத்தார் அரிஸ்ரோட்டில். அதன் அர்த்தம் இன்றைய சந்தேக வகுப்பு போதும். வேறு பயிற்சிகள் இருக்கின்றன என்பதுதான். புன்னகை தவழப் புறப்பட்டான் அலெக்சாண்டர்.

அவனுடைய சந்தேகங்கள் எல்லாமே அவனுடைய எதிர்காலத்தை நோக்கியே இருப்பது அரிஸ்ரோட்டிலுக்கு உள்ளுக்குள் பெருமையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் தனக்குத் தெரிந்த அத்தனை விடயங்களையும் முடிந்தவரை அலெக்சாண்டருக்கு கற்றுக் கொடுத்துவிடுவது என்று முடிவு செய்திருந்தார்.

மாசிடோனியாவைச் சுற்றியிருக்கும் நாடுகளில் எப்படியெல்லாம் ஆட்சி நடத்தப்படுகிறது, யார் யாரெல்லாம் ஆட்சி நடத்துகிறார்கள், எப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் அமுல்படுத்தப்படுகிறது, யுத்தங்களை எப்படித் தொடுக்கிறார்கள், பகைவர்களை எப்படிச் சமாளிக்கிறார்கள் என்பதையெல்லாம் விரிவாக அலெக்சாண்டரின் மனதில் ஏற்றிக்கொண்டே வந்தார்.

ஒருநாள் அரிஸ்ரோட்டில் அகாடமி மாணவர்களை எல்லாம் அழைத்தார். அலெக்சாண்டர் உட்பட எல்லோரும் அவருக்கு முன் ஆஜரானார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக உங்களுக்கு நாட்டின் மன்னராகும் வாய்ப்புக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். எப்படிப்பட்ட ஆட்சியை நடத்துவீர்கள்?

மாணவர்கள் எல்லோரும் உற்சாகமாகப் பதில் கொடுத்தனர். மக்களுக்குக் குறை இல்லாத வகையில் ஆட்சி நடத்துவேன். வரியே கட்ட வேண்டாம் என்று சொல்வேன். எல்லோருக்கும் கல்வியை அளிப்பேன். பிறகு அவரவர்க்கு உரிய வேலையையும் நானே தருவேன்.

ஒவ்வொருவரும் அவரவர் மனதில் பட்டதைச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். ஆனால் இந்தக் கேள்விக்கு அலெக்சாண்டர் எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை. அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

சரி, பிரச்சினை என்று வந்தால் எப்படித் தீர்ப்பீர்கள்? அடுத்த கேள்வியைக் கேட்டார் அரிஸ்ரோட்டில்.

(தொடரும்)

கடவுள் அருகில் இருந்தால் சிலந்தி வலையே காக்கும் சுவராகும். இல்லையென்றால் சுவரும் சிலந்தி வலையாகும். - இத்தாலி பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நின் வீதியில் இருந்து விரதமிருந்தார் இன்னும் இரங்காயோ நல்லூர் முருகா!

கந்தசஷ்டி விரதம் நேற்றைய தினம் ஆரம்ப மாகியுள்ளது. விரதங்களில் மிகவும் கடின மானது கந்தசஷ்டி விரதமாகும்.

முருகனை நோக்கி கடும் விரதமிருந்து அவன் அருள் வேண்டுகின்ற கந்தசஷ்டி விரத காலம் இம்முறை கொரோனாத் தொற் றுக் காரணமாக நிந்தைப்பட்டுள்ளதை நினைக் கும்போது நெஞ்சம் பொறுக்கவில்லை.

அதிலும் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகிய நேற்றைய தினம் விரதம் அனுஷ்டிப்போர் நல்லூர் முருகன் ஆலயத்தின் வெளிவீதியின் கண், ஆங்காங்கே நின்றும் இருந்தும் கந்தப் பெருமானை வேண்டுதல் செய்ததனைப் பார்த்தபோது, இதயம் நெகிழ்ந்து போயிற்று.

கொரோனா எனும் கொடிய தொற்று கோரத் தாண்டவம் ஆடினும் கந்தப்பெருமானை வந் தனை செய்கின்ற கந்தசஷ்டி விரதத்தைத் தவறாமல் அனுஷ்டித்து வீட்டில் இருந்தும் நல்லூர் முருகன் ஆலயத் திருவீதியில் இருந் தும் சந்நிதியானின் கடலோரம் காத்திருந்தும் இன்னும் எங்கெல்லாம் கந்தன் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளானோ அங்கெல் லாம் வெளி வீதிதனில் வீற்றிருந்து, முரு கனை வழிபாடு செய்வதற்குள் இருக்கக் கூடிய பக்தி வைராக்கியத்துக்கும் நம்பிக் கைக்கும் நிகர் ஏது?

முன்பெல்லாம் கந்தசஷ்டி விரத காலத்தில் நல்லூர் உள்வீதியில் தவமிருந்து கந்தசஷ்டி கவசம் தனைப் பாராயணம் செய்து முரு கனின் திருவீதி உலாவைக் கண்டு, ஆலய உள் வீதியின் மாமரத்து ஓரமாய் வழங்கப்படுகின்ற தீர்த்தம்தனை வாங்கி அருந்துவர்.

கூடவே கதிரவன் சயனம் கொள்ளும் வேளை யில், வீட்டிலும் முருகனை வழிபாடாற்றி, ஒரு குடுவை தண்ணீரும் ஆறு மிளகுமே போசன மாய் ஆறு நாள் நீடிக்கும் விரதத்தில் இம் முறை முருகனைக் கண்டு வணங்காத வேதனை விரதம் இருப்போரிடம் வெளிப்பட் டதைக் கண்டேன்.

முருகா! அசுரனாகிய சூரனுக்கே நின் திருப்பெருவடிவம் காட்டியவன் நீ!

நின் திருப்பெருவடிவம் கண்டதனால், சூரன் பெரும்பேறு பெற்றான். வேலும் மயிலுமாய் நின்திருவடி தொழும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது.

தமிழ்க் கடவுளாய் நீ இருக்கின்றவனாத லால், சூரனை மன்னித்து அவனுக்கு முத்தி யும் நல்கினாய்.

அவனை அழிப்பதே உன் பணியாக இருந்தபோதிலும் நின் திருப்பெருவடிவம் கண்டவனைக் காலன் கவர்வது முடிந்த காரியமா என்ன?

நினைவந்தடைந்தார் அனைவருக்கும் நல்லருள் புரிகின்ற நல்லூர் முருகா! கந்த சஷ்டி விரதம் பூண்டு நின் திருமுகம் காண் பதற்காய் நீ அமர்ந்த பெருவீதியில் தவம் இருப்போர்க்கு ஒருக்காலேனும் உன் திரு முகத்தைக் காட்டு.

கூடவே அடுத்த கந்தசஷ்டி விரத காலத் தில் நீ வீதி வலம் வந்து அருள் புரிய ஆக வேண்டியதைச் செய்.

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தில் இணையப்போவதில்லை

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உத வியை பெற்றுக்கொள்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதி யத்தின் கடன் திட்டத்து டன் இணைந்து அரச நிதி கையிருப்புக்காக கடனை பெற்றுக் கொள் ளுமாறு முன்வைக்கப்பட் டுள்ள யோசனையை அர சாங்கம் நிராகரித்துள் ளது.

சர்வதேச நாணய நிதி யத்தின் கடன் திட்டத்தில் இணைந்தால், நாட்டில் வரி அதிகரிக்கவும், அரச நிறுவனங்களை தனி யார்மயப்படுத்தவும் ரூபா யின் பெறுமதியை குறை க்க வேண்டும் போன்ற நிபந்தனைகளுக்கு அடி பணிய நேரிடும்.

அப்படி நடந்தால், அர சாங்கம் பாரதூரமான சமூக, அரசியல் பிரச்சி னைகளை எதிர்நோக்க நேரிடும் என்பதால், சர்வ தேச நாணய நிதியத்தி டம் செல்வதில்லை என தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசாங் கம் சர்வதேச நாணய நிதியத்துடன் சம்பந்தப் பட்டாலும் அவர்கள் நான்கு மாதங்களுக்கு 150 மில்லியன் அமெ ரிக்க டொலர்களையே வழங்குவார்கள்.

இந்தச் சிறிய தொகை நிதியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் பெரிய அர்ப்ப ணிப்புகளை செய்ய வேண்டும் என்பதால், குறித்த யோசனையை நிராகரித்துள்ள அரசா ங்கம், ஏனைய நிதி அமைப்புகளின் உதவி களைப் பெற்றுக் கொள்ள வுள்ளது. (ஐ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்ப கல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத் தில்** கனகம்புளியடி, சரசாலை, கெருடா வில், மட்டுவில், கல்வயல் ஆகிய இடங்க ளிலும்

**வவுனியா பிரதே சத் தில்** பண்டாரிக்கு ளம், தவசிக்குளம், மதவுவை த்த குளம், தோணிக்கல், மூன்று முறிப்பிலிருந்து பூ ஓயா வரை, Gowloom ஆடை த் தொழிற்சாலை இரட்டைப்பெரியகுளம் இராணுவ முகாம், Na ional Youth Corps, சேவாலங்கா, குடாகச்ச கொடிய கிராமம், மடுகந்த விலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொ டிய கல்லுடைக்கும் ஆலை, வாரிக்குட்டியூர், நித்திய நகர் ஆகிய இடங்களி லும்,

**மன்னார் பிரதேசத் தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், Youth Traini ng Centre, தலைமன் னார் Palmyrah House, கூல் மென் ஐஸ் தொழிற் சாலை, அந்தோனிப்பி ள்ளை ஐஸ் தொழிற் சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்கா லைப்பாடு ஐஸ் தொழிற் சாலை, கரைசல் Pal my rah House Timex ஆடைத்தொழிற்சாலை, தலைமன்னார் வைத் தியசாலை, New Silk Road Aquatic Com pany ஆகிய பிரதேச ங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சிக்கலுள்ள மாணவர்கள் தொடர்பு கொள்ளலாம்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக் கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி பல்கலை க்கழக நுழைவு மற்றும் வெட்டுப் புள்ளிகளில் சிக் கல் உள்ள மாணவர்கள் எதிர்வரும் 23 ஆம் திக திக்கு முன்னர் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தொலைபேசி எண்கள் மற் றும் மின்னஞ்சலூடாக தொடர்புகளை கொண்டு முறையிடுமாறு மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி 0112695 301, 0112695302, 011 2692357, 01126758 54 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகவும், appeals@ugc.ac.lk என்ற மின்னஞ்சல் மூல மாகவும் தொடர்பு கொ ண்டு உதவிகளையோ அல்லது முறைப்பாடுக ளையோ பதிவுசெய்ய லாம் என மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்க லாமே தவிர, நாம் அவளின் இரத்தத் தையே உறிஞ்சிவிடக்கூடாது."**

-தமிழகக் கவிஞர் அறிவுமதி

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இயற்கைக்கும் அறிவுக்கும் உள்ள உறவு



ஒடுங்கியும், விரிந்தும், பொருளாகவும், கருத்தாகவும், நன்மையாக வும், தீமையாகவும், இன்பமாகவும், துன்பமாகவும் இயங்கும் அறிவை உடைய மனிதன் எந்த அளவுக்கு, எவ்வளவு ஆழ்ந்து இயற்கையை, அதன் உண்மைகளை, இரகசியங்களை உணர்ந்து கொள்கின் றானோ அந்த அளவிற்கே அவன் வாழ்வில் வெற்றியும், மகிழ்ச்சி யும், நிறைவும், அமைதியும் பெறுகிறான். இயற்கையை, அதன் விரிவான இயக்க ஆற்றல்களை, மனிதன் அறியாமலோ, அல்லது அறிந்தும் மறந்தோ, புலனளவில் குறுகி இயங்கும்போது அறிவு, காலம், தூரம், வேகம், பருமன் என்ற பரிணாமங்களால் கருத்தாகவும், வடிவமாகவும் மாற்றம் பெற்று உயர்வு தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றது.

இந்த நிலையில் அறிவுக்குத் தன்முனைப்பு (Ego) எனும் சிறுமை நிலை உண்டாகின்றது. இந்த சிறுமை நிலையில், மயக்கம், உணர்ச்சி, பயம், மிரட்சி, விளைவறியாச் செயல்கள், சிக்கல், கவலை இவை தோன்றிப் பெருகித் துன்பமடைகின்றது. இயற்கையோடு விரிந்தும், ஆழ்ந்தும், அதன் பெருமையோடு ஒன்றும்போது விளக்கம், விழிப்பு, அன்பு, கருணை, நிறைவு, அமைதி, மகிழ்ச்சி இவை பெற்று அமைதி பெறுகிறது. இங்கு "தன்முனைப்பு" என்ற திரை விலகி இயற்கை என்ற அருட்பேராற்றலோடு இணைந்து மனிதன் பேரின்பமடைகிறான்.

எனவே, இயற்கையோடு ஒன்றி, உணர்ந்து, தெளிந்து விழிப்புடன் வாழ்வதே ஆறாவது அறிவைப் பெற்ற மனிதனின் பிறவி நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு ஒப்ப வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வே தெய்வ வழிபாடாக உருவாகியது.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## பன்னிரெண்டாமிடத்தில் குரு பகவான், பண விரயங்கள் அதிகரிக்கும்!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**கும்ப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 12 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 12 ஆம் இடம் என்பது அயன சயன ஸ்தானமாகும். அதுமட்டுமல்லாமல் பயணங்களையும் விரயங்களையும் குறிக்கும் இடமாகும். அந்த இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். குடும்பச்சுமை கொஞ்சம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. தொழில் சிறப்பாக இருந்தாலும் சேமிக்க இயலாத நிலை உருவாகலாம். உத்தியோகத்தில் திடீரென ஊர் மாற்றம் வந்து மனதை வாட வைக்கலாம். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு திரும்ப முடியாத சூழ்நிலை கூட ஏற்படலாம். பொறுமையும், நிதானமும் தேவைப்படும் நேரமிது. சுய ஜாதகம் பலம்பெற்று இருப்பவர்கள் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிக்கொள்ள இயலும். இடையில் சில மாதங்கள் உங்கள் இராசிக்குள் குரு வருகின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். தொடர்ந்து குரு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் தாய்வழி ஆதரவு கிடைக்கும். தொழில், முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டிச் சென்று பணிபுரிய வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு, அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். இடம், வீடு வாங்குவது அல்லது விற்பது, பழைய வாகனத்தைக்கொடுத்து விட்டு புதிய வாகனம் வாங்குவது சம்பந்தமாக நீங்கள் செய்த முயற்சியும் கைகூடும்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் ஜீவன ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். சிறு தொல்லைகள் வந்தாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. உத்தியோகத்தில் பணிநிரந்தரம் ஆகாதவர்களுக்கு இப்பொழுது பணிநிரந்தரம் ஆகலாம். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாங்கிய கடனில் ஓரளவேனும் கொடுக்கக்கூடிய விதத்தில் பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணையின் மூலம் வருமானம் வரலாம்.

குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் ஆயுள் ஸ்தானம் பலப்படுகின்றது. ஆரோக்கியத் தொல்லை அகலும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். தொழிலில் ஏற்பட்ட குறுக்கீடு சக்திகள் அகலும். குடும்பத்தில் சுபச்சடங்குகள், கல்யாணம் போன்ற காரியங்கள் சிறப்பாக நடைபெறும். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கலாம்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிக்கு சூரியன் சப்தமாதிபதி ஆவார். அதாவது களத்திர ஸ்தானதிபதி. அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். சுபச்செய்திகள் வந்த வண்ணமாகவே இருக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகிவிடும். கொடுக்கல் - வாங்கல்களில் பெரிய தொகை கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத் துணைக்கு வேலை சம்பந்தமாக முயற்சி செய்திருந்தால் அது கைகூடும். தொழில் போட்டிகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)**

உங்கள் இராசிக்கு ஆறாமிடத்திற்கு அதிபதியானவர், சந்திரன். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்திற்கு அதிபதியாவார். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. குளிர்ச்சியான உணவுகளை உட்கொள்ள வேண்டாம். அதுமட்டுமல்லாமல் உங்களுக்கோ, உங்கள் உடன்பிறப்புகளுக்கோ மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களை பகைத்துக்கொள்ள வேண்டாம். வீண் விரோதங்களை வளர்த்துக்கொள்வதன் மூலமும் மற்றவர்களை விமர்சிப்பதன் மூலமும் பிரச்சினைகள் அதிகரிக்கும். எதையும் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகாண வேண்டிய நேரமிது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். எனவே உங்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் கூட தாமதப்படலாம். இக்காலத்தில் நேர்மறை எண்ணங்களையே சிந்திப்பது நல்லது.




**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வழிகாட்டும் அனுபவஸ்தர்கள் வாயிலாக வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள். முன்கோபத்தின் காரணமாக சில முன்னேற்றப் பாதிப்புகள் வந்தாலும் கூட சமாளித்து விடுவீர்கள். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வியாபாரப் போட்டிகள் அதிகரித்தாலும் கூட அதைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். 'கட்டிய வீட்டைப் பழுதுபார்க்க அல்லது விரிவு செய்ய கையில் பணம் இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, வரவேண்டிய இடத்திலிருந்து பணம் வந்து சேரும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக் காலில் செவ்வாய் மற்றும் இராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04. 2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியான உங்கள் இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். ஜென்ம குருவாக இருந்தாலும் நன்மைகள் அதிகம் செய்யும். தனலாபாதிபதியான குரு இராசியில் உலா வரும் பொழுது, வருமானம் போதுமானதாக இருக்கும். தெய்வீகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபகாரியங்கள் கைகூடும். குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் உடல்நலம் சீராகும்.

பிள்ளைகளின் வாழ்க்கை சீராக வழிகாட்டுவீர்கள். பெற்றோர்களின் பிறந்தநாள் விழாக்கள், பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள், உடன்பிறப்புகளின் திருமணம், கட்டடம் கட்டும் முயற்சி, கடைதிறப்பு விழாக்கள் போன்ற நல்ல காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறத் தொடங்கும். தொழிலில் மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும்.

இருப்பினும் அவற்றை முறியடித்து வெற்றிகாண்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பயணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். மகரம், கும்பம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. பணத்தட்டுப்பாடுகள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஸ்தம்பித்து நிற்கும். 'வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்க முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் 'சொந்த ஊர் திரும்ப முடியவில்லையே' என்று கவலைப்படுவர். உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். விரயங்கள் கூடுதலாக இருக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் இருந்தும் அதை உபயோகப் படுத்திக்கொள்ள இயலாது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்துப் பூஜை அறையில் சனிக்கிழமை தோறும் அனுமன் கவசம் பாடி வழிபடுவது நல்லது. பௌர்ணமி விரதமிருந்து மால்மருகனை வழிபடுவதன் மூலம் மகத்தான பலன்களைப் பெறலாம். குலதெய்வ வழிபாடு, குரு வழிபாடு நன்மை தரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

கும்ப இராசியில்பிறந்த பெண்களுக்கு, குடும்பச்சுமை அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் விரயங்களே கூடுதலாக இருக்கும். உடல்நலனில் அதிக கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உடன்பிறந்தவர்களால் ஓரளவேனும் நன்மை கிட்டும்.

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். உங்களின் முன்னேற்றத்தைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், உத்தியோக மாற்றங்கள் கூட எதிர்பாராத விதத்தில் வரலாம்.

(தொடரும்)

## கொரோனா...

ழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு-13 பகுதியில் 54 மற்றும் 88 வயதுடைய இருவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பினால் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொழும்பு-12 பகுதியில் 88 வயதுடைய ஒருவரும் கொழும்பு-15 பகுதியில் 39 வயதுடைய ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பொரளைப் பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய ஒருவரும் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## தனியார் பேருந்...

தப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித் தடங்கலில் பயணித்த தனியார் சிற்றூர்தி ஒன்று அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதன் காரணமாக கரவெட்டி சுகாதாரப் பகுதியினரினால் அச் சிற்றூர்திக்கு தனிமைப்படுத்தல் அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளதுடன் சிற்றூர்தியின் சாரதி மற்றும் நடத்துநரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஞா-33,60)

## 12 பவுண் தாலி...

யாழ். நகரில் புடவை நிலையம் நடத்தும் வர்த்தகர் தீபாவளிப் பண்டிகை விற்பனை முடிந்து வீடு திரும்பிய சமயம் மனைவியின் கழுத்தில் கத்தி வைத்து அச்சுறுத்தி 6 லட்சம் ரூபாய் பணமும் 12 பவுண் தாலிக் கொடியும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ். நகரின் மத்தியில் இரு புடவையகம் நடத்தும் சோமசுந்தரம் வீதியில் வசிக்கும் வர்த்தகர் தீபாவளி விற்பனையில் ஈடுபட்ட பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கணவனும் மனைவியுமாக வீடு திரும்பியுள்ளனர்.

இதன்போது வீட்டிற்கு அண்மையில் 3 மோட்டார் சைக்கிளில் காத்திருந்த ஐவர் திடீரென பாய்ந்து மனைவியை இழுத்து மனைவியின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தியதோடு கணவனின் கையில் இருந்த பையை பறித்தெடுத்துள்ளனர்.

இவ்வாறு கொள்ளையர்கள் பறித்த பையில் விற்பனைப் பணம் 6 லட்சம் ரூபாய் இருந்த அதேநேரம் மனைவியின் கழுத்தில் அணிந்திருந்த 12 பவுண் தாலிக் கொடி மற்றும் சங்கிலியையும் அறுத்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட இழுபறியில் சங்கிலி மட்டும் வீழ்ந்தமையினால் உரியவர்களின் கரத்தில் கிட்டியது.

இது தொடர்பில் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் மோப்ப நாய் சகிதம் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஞா)

## கனகபுரம் துயி...

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார நடைமுறைகளுடன் துப்புரவு பணிகளில் ஈடுபட பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தினை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்று வந்தன.

குறித்த பணியில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் அப்பகுதிக்கு வருகை தந்ததுடன், கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமாரவும் வருகை தந்திருந்தார்.

தற்போது உள்ள கொரோனா காலப் பகுதியில் அதிகளவான மக்கள் கூடியிருப்பது தொடர்பில் பொலிஸார் சிறீதரனிடம் வினவினர்.

இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே நாம் சிரமதான பணியில் ஈடுபட்டுவருவதாக அவர் தெரிவித்தார். இதன்போது குறித்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும் என பொலிஸார் தெரிவித்ததை அடுத்து அதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உள்ளிட்ட பலரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதுடன், வருகை தந்திருந்தவர்கள் பெயர் விபரம் மற்றும் வாகன இலக்கங்களும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் அங்கு வருகை தந்திருந்தவர்களை பொலிஸார் ஒளிப்பதிவும் செய்து கொண்டனர்.

வாக்குமூலம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து கருத்து தெரிவித்த சிறீதரன்,

கடந்த வருடம் மாவீரர் நாள் நினைவேந்தலிற்கு ஜனாதிபதி எவ்வித தடையும் விதிக்கவில்லை. இவ்வாறான நிலையில் இம்முறையும் தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் கடந்த சில நாட்களிற்கு முன்னர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன். அதே போன்று நேற்றுமுன்தினம் சுமந்திரன் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றில் உரையாற்றியிருந்தார்.

இவ்வாறான நிலையில் கடந்த வருடம் போன்று இவ்வருடமும் மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கு தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (ஞா)

## குருநகரில்...

குருநகர்ப் பகுதியில் வசிக்கவில்லை எனவும் பாண்டியன்தாழ்வுப் பகுதியில் தங்கியிருந்து கொழும்பு சென்ற நிலையிலேயே அவருக்கு தொற்று உறுதியானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வடக்கில் அதி...

மாமுனைச் சந்தியையும் பளையையும் இணைக்கும் கடல் நீரேரி வீதியில் உள்ள தம்பகாமம் காட்டுப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.15 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் மாமுனை, செம் பியன்பற்றைச் சேர் ந்த தனபாலசிங்கம் குலசிங்கம் (வயது- 42) என்ற இளம் குடும்பஸ் தரே பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதியூ டாக அவர் சென்று கொண்டிருந்த போதே வாள்வெட் டுக்கு இலக்காகி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடல் நீரேரி சது ப்பு நிலத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அம்புலன்ஸ் மூலம் பளை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போதும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஞா-60,100, 312,316,350)

## தரம்...

பரீட்சைமுடிவுகளை பெறுவதற்கு, exam (பரீட்சை குறியீடு) (குறியீட்டு எண்) என type செய்து 1919 என்ற இலக்கத்திற்கு அனுப்பும்படி கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு 160 வெட்டுப் புள்ளிகளும் மன்னார் மாவட்டத்துக்கு 158 வெட்டுப் புள்ளிகளும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. (ஞா).

## ஆலயத்துக்குள்...

மானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குள் பக்தர்கள் உள்நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் ஆரம்ப நாளான நேற்று பெருமளவான அடியார்கள் ஆலயத்திற்கு சென்றிருந்தபோதும் வெளி வீதியில் வைத்தே முருகனைத் தரிசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சநிலை காரணமாக சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இவ்வாறான நடைமுறை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## நேற்று மட்டும்...

தொடர்புடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து இலங்கையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 17,287 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 200...

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிலர் 200 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

காலி சங்கமித்தை கல்லூரி மாணவி சியாதி சண்துண்தி கருணாதிலகா மற்றும் மொகமெட் பர்சான், மொகமெட் அம்ர் சிகத் சந்துனு ஆகிய மூவரின் பெயர்கள் நள்ளிரவில் கிடைத்துள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அரிய சாதனை அந்த மாணவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஞா)


செவன
திகதி 15/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 313
G 12 28 34 51

மஹஜன சம்பத
திகதி 2020/11/15
சீட்டிழுப்பு இலக்கம் 4307
N 3 8 2 7 2 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0674
Q 16 23 38 50 80

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2602
N 40 43 53 79
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.11.15
சீட்டிழுப்பு இலக்கம் - 344
Z 12 48 49 59
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1277
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 15.11.2020
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
V 01 22 57 71
SUPER 500 2 5 8 3
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 21,20,389/=
திகதி : 15.11.2020
வெற்றி வாரம் : 2984
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள்
11 33 51 52
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,888,580

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1103
வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 84,071,020/-
வெற்றி இலக்கங்கள்
11 19 30 67 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.15
சீட்டிழுப்பு இல.: 3433
வர்ணம் : இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,206,689.60
வெற்றி இலக்கங்கள்
33 36 50 75 C
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9878
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜய
651
மஞ்சள்
15.11 2020
F 02 41 44 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,991,625
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## காணிகள் தேவை

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டது,
கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது,
மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது,
**பத்து பரப்புக்கு மேலே உள்ள காணிகள் தேவை.**
( தரகர் தேவையில்லை )
(4653)

**076 221 2037**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ராச வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி உண்டு.
( தரகர் தேவையில்லை. )
(4653)

**077 288 0152**
**074 075 4204**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவ கோவில் சந்தி அருகாமையில் இரண்டு பரப்பு (2 பரப்பு) காணி உள்ளது. மற்றும் நல்ல நிலையில் உள்ள 3 பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது.
( தரகர் தேவையில்லை )
(4653)

**குரு : 077 805 1655, 076 640 0974**



தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்திரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.
(C-694)



## றோயல்

**சுத்தமான தேன்**




உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.
ஆய்வு கூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது.

Packed By :
ROYAL INDUSTRY®, JAFFNA.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா®, இல. 288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்து சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

**T.P : 021 222 2567**


# இன மத பேதங்களால் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது

## தேசிய மக்கள் சபையின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனவாதம் மற்றும் மத வாதங்களினால் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என தேசிய மக்கள் சபையின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

இப்படியான செயற்பாடுகளை முன்னெடுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை அந்நாட்டு மக்களே தோற்கடித்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் போன்ற ஒருவருக்கு தனது முதலாவது பதவி காலத்திலேயே வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதை அமெரிக்காவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

இதனால், ஜன்னல், வாசல் கதவுகளை பலமாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் சமீர பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# 5 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியை ஆளும்தரப்பினர் அரசியலாக்கியுள்ளனர்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்கட்சியினால் முன்வைக்கப்படும் அனைத்து யோசனைகளையும் அரசாங்கம் குறைத்தே மதிப்பிட்டு வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பில் செயற்பட்டு வரும் சுகாதார பிரிவினரை தனது ஸ்டத்திற்கு இடமாற்றம் செய்துவரும் ஆளும் தரப்பினர்,5 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியையும் அரசியலாக்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் அலு வலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ்பரவலின் முதலாம் அலையை சுகா தார பிரிவினர்,பொலிஸ் மற்றும் இராணுவத்தினரும் இணை ந்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தியிருந்தனர். அப்போதைய சுகாதார பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவும் சிறந்த முறையில் தனது செயற்பாடு களை முன்னெடுத்திருந்தார்.

எனினும்அரசாங்கம்அவரை இந்த பதவியிலிருந்து மாற்றியுள்ளது. இந்நிலையில் அவருக்கு பதவி உயர்வு வழங்கியதாகவும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. அவருக்கு பதவி உயர்வு வழங்குவதாயின் சுகாதார பிரிவில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் சுற்றாடல் துறைக்கே அவர் பதவி உயர்த் தப் பட் டு ள் ளா ர் .

இதேவேளை, சுகா தார அமைச் சின் ஊடகப் பேச்சாள ராக நியமிக்கப் பட்ட ஜயருவன் பண்டா ரவையும்தற் போது சுகாதார அமைச்சர் இந்த பதவியிலிரு ந்து நீக்கியுள்ளார். அர சாங்கம் தனது தனிப்பட்ட விருப் பத்தில் இவ்வா றான முடிவுகளை எடுத்து வருகின் றது. (ஞா)


## வேலை வாய்ப்பு

பீட்சா தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
(C-696)

**077 240 3801**



விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025/=Kg
0768226240
(C-505)

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள K.M.V.R-ஆயுர்வேத மருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.
(C-697)

**076 913 2049, 077 292 0394**
K.M.V.R-ஆயுர்வேத மருந்து & பான்சி கடை.
K.K.S வீதி, மாவிட்டபுரம்.



# கண்ணீர் அஞ்சலி



எமது குடும்பத்தின் குலவிளக்கு
**சிவகுரு மில்**
உரிமையாளரான
அமரர்
## கந்தையா சிவகுருநாதன்

அவர்கள் 12.11.2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு மீளாத்துயர் கொள்கின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(C-693)

பிறப்பு 26.12.1939
இறப்பு 12.11.2020

கரணவாய் தெற்கு, கரவெட்டி.
077 621 6048
077 831 5965
ஆழ்ந்த துயரத்துடன் குடும்பத்தினர்



மீண்டும்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-684)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:-.021 222 3536



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.